
தமிழீழ ஆவணக் காப்பகம்

புரட்டாதி 1993

# எரிமலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கடற்கரும்புலிகளின் தியாகப்பயணம்


மக்கள் பிரயாணம் செய்யும் பிரதான போக்குவரத்துப் பாதைகள் அனைத்தும் சிறிலங்கா அரசால் மூடப்பட்டுவிட்டன. ஆனால், மக்கள் பல இடர்களை அனுபவித்து இன்னல் நிறைந்த பாதைகளால் நாட்கணக்காக தூக்கமின்றி, களைத்துச், சோர்ந்து, கால்வலிக்க நடந்து, மாட்டுவண்டிகளில் ஏறி, படகுகளில் ஏறி பிரயாணித்து தமது இலக்குகளை சென்றடைகின்றனர். இனிய உறவுகளோடு கூடி மகிழவும், பேசிச் சிரிக்கவும், நெஞ்சு நிறைந்த துயரைக் கொட்டவும், பஞ்சம் போக்கவும் பயணிக்கின்ற மக்கள் கிளாலி நீரேரியில் படு பயங்கரமாக கொலைசெய்யப்பட்டதும் நிகழ்ந்தது. அடிக்கடி கிளாலியில் எதிரிப்படையின் விசேஷ விசைப்படகுகள் மக்களின் பிரயாணத்திற்கு இடையூறு விளைவித்தன; துன்புறுத்தின. அடாவடித்தனங்கள் கிளாலியில் கட்டவிழ்த்து விடப்பட்டே இருந்தது.

மிகப்பெரிய தடை;

தடைகளை எதிர்த்து உடைத்துக் கொண்டு மக்கள் அதேபாதையில், அதேஏரியில் மீண்டும் மீண்டும் பயணித்தனர். 'எங்கட ஏரியில போகிறோம்' என்கிற உணர்வு மட்டும் உரமாய் இருக்க, தடைகளை அவர்கள் தமது படிக்கற்களாக்கிக் கொண்டு நடந்தார்கள்.

"தமிழீழ மக்கள் தம்மீது ஏற்படுத்தப்படுகின்ற தடைகளை தாமாகவே தகர்த்து முன்னிலும் வேகமாக தமது விடுதலையை நோக்கிச் செல்கின்றனர். இதுபோன்ற தடை வேறுநாடுகளில் எங்காவது ஏற்படுத்தப்பட்டிருந்தால், வெளிநாட்டு நிறுவனங்களே அத்தடைகளை தகர்ப்பதற்கு உதவியும், ஒத்தாசையும் வழங்குவதுண்டு. ஆனால், தமிழீழ மக்களிடம் இது மாறாகவே இருக்கின்றது. தமிழீழ மக்கள் தாங்களாகவே . புதுப்புது முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றனர். இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் அவர்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது திக்குமுக்காடுகின்றன" என்று ஒரு வெளிநாட்டு கட்டுரையாளர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு எமது மக்களின் மன



உறுதியினாலும், விடுதலைப் பற்றினாலுமே விதிக்கப்பட்ட தடைகளை கடந்து செல்ல முடிந்தது.

எமது கிளாலி நீரேரிக் கடல்.

*26.08.1993 அன்று. அதிகாலை 1.30 மணி.*

எமது மக்கள் நெஞ்சம் நிறைந்த துயரங்களோடும், ஏக்கத்தோடும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். கடற் கரும்புலிகள் மக்கள் பிரயாணித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். கொலைவெறிச் சீற்றங்கொண்டு சிறிலங்கா கடற்படையின் ஐந்து விசேஷ விசைப்படகுகள் நீரேரியைக் கிழித்துக் கொண்டு வருகின்றன. மக்கள் தமது வாழ்வின் கணங்களை எண்ணிக் கலங்கினர். கொடிய எதிரியின் மிருகவெறிப் பாய்ச்சல். தாக்கப்பட்டு அழிக்கப்பட்டு விடுவோம் என்றும், தமது இனிய குழந்தைகளைத் தவிக்கவிட்டு விட்டுப் போகப்போகின்றோமே என்றும் அந்த மக்கள் எண்ணிக் கலங்கிய ஒரு சில கணம்தானும் இல்லை.

எமது கடல் நீரேரி,
எமது மக்கள்
என அறைந்து கூவிக்கொண்டு இரு கரும்புலி வீரர்களின் வெடிமருந்தேற்றிய விசைப்படகுகள் விரைந்து வந்துகொண்டிருந்தன.

மட்டக்களப்பு மண்ணைச் சேர்ந்த கடற்கரும்புலி மேஜர் வரதனும், கடற்கரும்புலி கப்டன் மதனும் தமது உயிரினும் மேலான தாய்த் தேச மக்களை நெருங்கி அழிக்க முனைந்த எதிரியின் படகுகளை நோக்கிச் சென்று ஒரேநேரத்தில் மோதினர். பேரோசை ஏரியின் திக்கு எங்கும் எழுந்து நின்றது. நெருப்பின் சுவாலை ஏரியில் சுவாலித்திருந்தது. பத்துக்கும் மேற்பட்ட படையினர் மாண்டனர். எதிரியின் இரு படகுகளை எரித்து துவம்சித்து, கடற்கரும்புலி வீரர்களின் உயிர் மூச்சு தமிழீழக் காற்றில் கலந்தது.

தொடர்ந்து நடந்த கடற் சண்டையில் கடற்புலிகளான மேஜர் சிவா, லெப். பூபாலன், 2வது லெப். சுரேந்தர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

இந்நிகழ்வு நடந்து 96 மணித்தியால இடைவெளிக்குள் சிறிலங்காவின் கடற்படைக்குச் சொந்தமான இஸ்ரேலிய அதிவேக டோராப் படகு மட்டக்களப்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பருத்தித் துறையைக் கடந்துகொண்டிருந்த வேளை கடற்புலிகளின் நான்கு விசைப்படகுகள் வழிமறித்துத் தாக்கின. கடற்படையினரின் படகில் இருந்த நான்கு அதிகாரிகள் உட்பட பன்னிரண்டு சிறிலங்காப் படையினரும் அச்சத்துள் புதையலாயினர். கடற்கரும்புலிகளான மேஜர் புகழரசனும், கப்டன் மணியரசனும் வெடிமருந்து நிரப்பிய படகுடன் எதிரிப்படகுடன் மோதினர்.

தமிழீழத்தின் கடற்பரப்பில் எதிரிப்படையின் கடற்படையின் மீது நடாத்தப்பட்ட கடற்கரும்புலிகளின் மூன்றாவது ஆக்ரோஷமான தாக்குதலில் சிக்கி, நான்கு உயர் அதிகாரிகள் உட்பட பன்னிரண்டு படையினர் மரணத்தைத் தழுவிக்கொண்டனர். தமிழீழக் கடற்பரப்பில் கடற்புலிகளின் ஆதிக்கம் அவர்களின் தியாகத்தால் வலுப்பெற்று வருகிறது. சிறிலங்கா அரசு அதிர்ச்சி நிலைக்குச் சென்று மீளத் திரும்புவதற்கிடையில், மீள வரும் அதிர்ச்சிக்குள்ளாகும் அச்சமும், கவலையும் கொண்டு நிற்கிறது.

**நிதர்சன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரண்டாம் ஆண்டு
புரட்டாதி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.

# தமிழீழ ஆயுதப்போராட்டம் ஒரு வரலாற்றுப் போக்கு

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிகரமான தாக்குதல் நிலையில் (Offensive) உள்ளதென்பதும், சிறிலங்கா அரசு பலவீனப்பட்டுத் தற்காப்பு நிலைக்கு (Defensive) மிக மோசமாகத் தள்ளப்பட்டு வருகின்றது என்பதும், யதார்த்தபூர்வமான உண்மை. இதில் இராணுவ வெற்றிகள் முக்கியமானவை. மண்கிண்டி இராணுவ முகாமை (ஜனகபுர) "இதயபூமி-1" என்ற நடவடிக்கையின் மூலம் கைப்பற்றியமை, தமிழீழப் போரில், சிறிலங்கா அரசு அடைந்த மிகப்பெரும் இராணுவத் தோல்வியாகக் கருதப்படுகின்றது. ஏராளமான சிங்களக் குடியேற்றவாசிகளை வெளியேற வைத்ததன் மூலம், குடியேற்றங்கள் வாயிலாக, வடக்கு கிழக்குத் தாயகத்தைத் துண்டாடும் அரசின் நோக்கத்திற்கு ஆப்பு வைக்கும் அரசியல் இலட்சியம் கொண்ட தாக்குதலாக அது அமைந்துள்ளது. அடுத்ததாக கடற்கரும்புலிகள், சிறிலங்கா கடற்படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு இஸ்ரேலிய பீரங்கிப்படகு உட்பட மூன்று அதிவேக பீரங்கிப் படகுகளை அழித்து மூழ்கடித்ததைக் குறிப்பிடலாம். இது, தமிழீழக் கடலில், கடற்புலிகளின் ஆதிக்கம் வளர்ந்து வருவதையும், சிங்கள ஆதிக்கம் தேய்ந்து வருவதையும் குறியீடாகக் கொண்டுள்ளது. மேலும், அரசாங்கத்தின் பொருளாதாரத்தடையை உடைப்பதற்கு எமது கடற்படையினது வளர்ச்சியின் இன்றியமையாமையும் உணரப்பட்டுள்ளது. இத்தகு இராணுவத் தோல்விகளைக் கண்டு தடுமாறிய சிறிலங்கா அரசு, இராணுவத்தைப் பெருக்குவதன் மூலம், சமாளிக்க எடுத்த முயற்சியும் தோல்வி கண்டுள்ளது. இராணுவ ஆட்சேர்ப்புக்கான சகல தரங்களையும் குறைத்து, 10,000 இராணுவத்தினரை அரசாங்கம் திரட்ட முயற்சித்தபோது, 1000க்கு குறைவானோரே தோற்றியிருந்தனர். இராணுவத் தீர்வு முயற்சி பின்னடைவுகளைச் சந்தித்து வரும் நிலையில், ஆதிக்க நோக்குகளை அரசியல் ரீதியில் சாதிக்க எடுத்த முன்னெடுப்புகளும் சரிவரவில்லை. சிங்களப் பாராளுமன்றத் தெரிவுக்குழு, வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணத்துடன் இணைந்திருக்க வேண்டுமா என்பதை அறிய கிழக்குமாகாணத்தில் குடியொப்பத்தை வைக்குமாறு செய்த சிபார்சை நிறைவேற்ற அரசாங்கத்தால் முடியவில்லை. கிழக்குமாகாணத்திலும் சிலமாத இடைவெளியின் பின்னர் வடக்கு மாகாணத்திலும் குடியொப்பங்களை வைப்பதாகக் கூறி, கிழக்கு மாகாணத்தில் மட்டும் குடியொப்பத்தை வைக்க முன்மொழிந்த ஆலோசனையும் நிறைவேறவில்லை. கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களை வைத்து சர்வதேச உலகை ஏமாற்றவும், மக்களைத் திசை திருப்பவும், விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களை அந்நியப்படுத்தவும் எடுத்த எடுப்புக்களும் கைகூடவில்லை. இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துப்பாக்கி முனையில், பொய்யான தேர்தல் ஒன்றை நடத்தி, மக்கள் தீர்ப்பு என்ற ரீதியில் அரச ஆதரவுக் குழுக்களை மக்கள் பிரதிநிதிகளாகக் காட்டும் சூழ்ச்சியும் சூடுபிடிக்கவில்லை. அரசாங்க ஆள்பதியின் கீழ், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டதான இடைக்கால அரசாங்கம் ஒன்றை கிழக்கில் நிறுவி, சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுவதாகக் காட்டவும், இராணுவ நடவடிக்கைகளுக்குப் பலம் ஊட்டவும், மேற்கொண்ட முன்னெடுப்புகள் முன்னேறவில்லை. அரசியல் சட்ட 13வது திருத்தத்தின் கீழான, வடக்கு, கிழக்கு மாகாணசபையை இடைக்கால ஏற்பாடாக ஸ்தாபிக்கவும், விடுதலைப் புலிகளினின்று வேறுபட்டதான தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை, நிர்வாகத்தை ஏற்படுத்துவதான தோற்றத்தைத் தரவும் ஒற்றையாட்சி முறையின் கீழ், மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெறுதல் என்ற அளவில், ஒரு சமரசத்தைக் காணும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ள தமிழ்த் துரோகக் குழுக்களின் சுயநல அரசியலைக் கூடத் திருப்திப்படுத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. அரசாங்கத்துக்கும் இராணுவத்திற்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் விரிவடைந்து வரும் நிலையில் தற்போது வடக்கு கிழக்குப் பிரதேச விடயங்களில், இராணுவத்தின் ஆளுமை அரசாங்கத்தின் மீது அதிகரித்து வருவதையே, யுத்தக் கைதிகள் விடயத்தில், அரசாங்கத்தின் பின்வாங்கல் காட்டுகிறது. மீண்டும் மக்கள் விடுதலை முன்னணி மிகப் பெரிதாகத் தலையெடுக்கும் நிலையில், சிங்களப் பகுதிகளிலும் இராணுவத்தின் ஆதிக்கம் அரசாங்கத்தை விட மேலோங்கும் சாத்தியமே காணப்படுகின்றது. மிகைப்பட்ட இனவாதத்தால் தடுமாறும் அரசாங்கம், ஆதிக்கம் பெறும் இராணுவம், வளர்ந்துவரும் மக்கள் விடுதலை முன்னணி என்ற நிலையில், தமிழீழ ஆயுதப் போராட்ட விஸ்தரிப்பு, தீவிர மக்கள் போராட்டமாக விஸ்வரூபம் எடுக்க வேண்டும். தொண்டமானின் ஊடான சமாதான முயற்சி, நோபல்பரிசு பெற்றவர்களின் சமாதான முயற்சியை ஆராய்தல், சர்வதேச மத்தியஸ்தத்தைப் பரிசீலித்தல் என்ற அரசியல் தீர்வு முயற்சிகளில் ஈடுபட்ட போதிலும், சிங்கள இனவாதம் இராணுவ ரீதியாக எம்மண்ணில் வேரூன்ற எடுக்கும் முயற்சியை முறியடிக்க, தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டம் தனது இறுதி இலக்கை அடையும்வரை, வளர்ந்து செல்வதே தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்காய் இருக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கரும்புலிகள்

## தமிழீழ விடுதலைப் போரின் காவிய நாயகர்கள்

## உலகை வியப்பில் ஆழ்த்திய வீர மறவர்கள்

'கரும்புலிகள்' என்ற வார்த்தைப் பிரயோகம் உலகலாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடத்தும் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும், வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம்புகும் இக் கரும்புலிகள் யார்?

இவர்களின் உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும், மன ஓர்மமும், சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன.

இன்று உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விளையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர்.



**என்ரை மனசில செத்தவங்கள் ஞாபகங்கள்தான் நிரம்பி வழிகிறது. அவங்களை என்னால மறக்க முடியாது.**

- கப்டன் மில்லர் -

இவர்களிடம் ஆள், ஆயுதபலம் உண்டு. ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில்நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்டச் சக்திகளைப் பலமிழக்கச் செய்து தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர். இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு ஆள், ஆயுத, தொழில்நுட்பத் திறன்களைப் போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் உள்ள இவர்களது போராட்டத் திறன்களில் இருந்து மிக உச்சப்பயன்களைப் பெற்றால் ஒழிய போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும் அளவிற்குப் பல்வேறு திசைகளில் இருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச் சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கப்டன் கொலின்ஸ்



மேஜர் காந்தரூபன்



கப்டன் வினோத்

*அம்மா! நான் இயக்க வேலையா ஒரு இடத்திற்கு போக இருக்கிறேன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது. அது நாட்டுக்கு மட்டும்தான்.*

*-கப்டன் கொலின்ஸ் -*

எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலம்மிக்கதொரு இலக்கை அழிக்கக்கூடிய ஒரு படையணி ஒன்றை அமைக்கும் யோசனையைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்தில் இருந்தே கொண்டுள்ளார்.

அந்த எண்ணக் கருவைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றலைப் புலி வீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார்.

1981ம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் கொழும்பில் வைக்கப்பட்டிருந்த பொழுது தற்கொலைப் படையணி ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர பிரபாகரன் முயற்சித்தார். ஆனால், அது பல்வேறு காரணங்களால் தவிர்க்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப்படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன்மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது. சிறிலங்கா அரசும், புலிகளை அழிக்கலாம் எனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதேசமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாகப் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடாத்தத் தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987ம் ஆண்டுஆடி மாதம் 5ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து அம்முகாமைச் சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை, கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்றிலிருந்து இன்று வரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்திவிட்டோம். அதில் பல கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும், வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால், தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும் போது கூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையோடுதான் ஒரு புலிவீரன் செல்கிறான். சில வேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம். அல்லது திரும்பி வரலாம்.

ஆனால், கரும்புலிகளின் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்கள் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்துகொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உணமையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான், கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கின்றார்கள்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளை கருத்தில் எடுக்காது, உடைந்து நொருங்கிப்போய் இருக்கும் பாதை வழியே, சீராக நிதானமாக வெடி மருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளேயே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகன்ற சமுத்திரத்துள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்திசாதுரியமாக மீறி, வெடி மருந்துப் படகுடன் உட்புகுந்து, எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒருமுறை கப்பலைச் சுற்றிவந்து, குறித்த இலக்கின் மீது மோதி, வெடிமருந்துப் படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனித மனம் உடன்படாது. இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்ய முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக் கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தன்னுடைய இறுதி நேரத்தில் கூட பதற்றமின்றி உறுதியுடன், குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை.

விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ


மேஜர் டம்போ


கப்தன் சிதம்பரம்


கப்டன் ஜெயந்தன்

**நான் திரும்பி வர மாட்டன். என்னால முடிந்த அளவுக்கு உள்ளே சென்று முகாமின் சுவரோட மோதுவதுதான் நோக்கம்.**

- மேஜர் டாம்போ -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தன்னை அழித்துக் கொள்ள முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது.

அல்லது எதிரியின் கண்ணோட்டத் தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது. அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்து விசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

மன்னாரில் நடக்கிற முதல் கரும்புலித் தாக்குதலை நான்தான் செய்ய வேண்டும். உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும் தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப் படுத்தும் ஒரு கூறியீடுமட்டுமல்ல, எமது சமுதாய எண்ண வோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப்போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும், தனது உயிரைப் போக்கிக் கொள்ளும் போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளிவிடுவதுடன், வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட, தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டிவிடுகின்றது. தேச பக்தியையும் வீர உணர்வையும் ஊட்டிவிடுகின்றது. தேச பக்தியையும், வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.



**மாங்குளம் முகாம் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போகவேணும். நான் புறப்படுறன்.... இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது.**

**. லெப். கேணல் போர்க்.**

இன்று பல நூற்றுக் கணக்கான புலிவீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும் போது, தன்னைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும், வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காண முடியாது. இது உலக அதிசயங்களிலே புதியதொன்றாகும்.


களம்புகும் கரும் புலிகளின் பிரமிப் பூட்டும் வீரச்சாதனைகள், சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு கிலியை உண்டுபண்ணுகின்ற அதே சமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத்தாக்கம், தமிழ்க்குடி மக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

நன்றி;

விடுதலைப் புலிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




மனித வாழ்வு பெரும்பாலும் ஒரு சிறு அதிஷ்டத்தினால் அல்லது துர்அதிர்ஷ்டத்தினால் வழிநடத்திச் செல்லப் படுகிறது. 'வாழ்வு' என்பதை அது போகிற போக்கில் விட்டு விடுகிற பெரும்பாலான மனிதர்களுக்கு அது இப்படி அமைந்து போகிறது. இதற்கு விதிவிலக்காக அமைகிற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மனிதர்கள், தமது வாழ்வில் மரணத்தை வென்று வெற்றி பெறுவதை மிகப் புத்தி பூர்வமாகத் திட்டமிட்டுச் செய்துவிடுகிறார்கள்.

இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரே மனிதர்களைச் சிந்திக்கத் தூண்டிய குற்றத்திற்காகப் புதைகுழிக்கு அனுப்பப்பட்டவன் சோக்கிரட்டீஸ். “எனது கருத்துக்களைப் புதைத்துவிட்டு நான் வாழ வேண்டுமா?” என்று தெரிவு செய்ய வேண்டிய நிலை வந்தபோது, மிகத் தைரியமாகவும், திடமாகவும் “என்னைப் புதையுங்கள்; என் கருத்து வாழட்டும்.” என்று கூறினான் சோக்கிரட்டீஸ். இவனுக்குச் சற்றும் குறைவிலாத ஒரு பெண்மணியை இன்று எமது தேசத்தில் நாங்கள் கண்டோம்.

தமிழீழத்தின் தேசியத் தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுவதுபோல, தமிழீழச் சுதந்திரப் போராட்டம் தனக்கே உரித்தான சிறப்புகள் பலவற்றைக் கொண்டது. உலக வரலாற்றில் எவரும் சாதிக்காத, எங்கும் நிகழாத அற்புத அர்ப்பணிப்புகளைக் கொண்டது. ஒரு சாதாரணத் தாயின் அசாதாரணத் துணிவும், அவரின் அலாதியான பற்றுணர்வும் தர்மத்தின் குரலாகத் தனித்து நின்று ஒரு சாம்ராஜ்ய அதர்மத்தை எதிர்த்த நேர்மையும், நீதியின் நெருப்பில் தன்னை எரித்து அநீதிக்குச் சவால்விட்ட தியாகமும் உலகம் முழுவதையும் ஈர்த்த பண்புகள்.

சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெறுகிறார்கள். 'இந்திய அமைதிகாக்கும் படை' என்ற பெயரில் இங்கு வந்த ஆக்கிரமிப்புப் படையால் சாதாரண மனிதர்கள் பலரைக் கொன்று குவித்துச் சரித்திரம் படைக்க முடிந்தது. ஆனால், அன்னை பூபதி போன்ற அசாதாரண ஆற்றல் உள்ள மனிதர்களைக் கொல்ல அவர்களால் முடியவில்லை. அவர்கள் இலட்சக்கணக்கான ரவைக் குண்டுகளை வீசி எறிந்தார்கள். ஆனால், 'அன்னை பூபதி' போன்றவர்களைக் கொல்லக்கூடிய ரவையை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

``The bullet that is to Kill me has not yet been moulded'' என்று நெப்போலியன் கூறியது இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது.

மக்களின் மனதில் பெருந்தாயாக நிலைத்துவிட்ட அன்னை பூபதியின் வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த வாழ்வைப் பதிவு செய்துள்ளது, “இது எங்கள் தேசம்” என்ற வீடியோப்படம்.

“நந்திக் கடலும் நாயாற்றுப் பெருவெளியும்” என்ற கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் அருமையான கவிதையோடு தொடங்கும் இந்தப்படம், “நாங்கள் வித்தியாசமானவர்கள், எங்கள் தேசம் வித்தியாசமானது” என்று கூறி, முடியும்வரை தொடர்பு கெடாமல், தொய்வு ஏற்படாமல் தயாரிக்கப் பட்டிருக்கிறது எனலாம்.

இந்தியப் படை இங்கு வந்தபோது, மக்களால் வரவேற்கப்பட்ட முறையை, ஹிந்திப் பாடல் ஒன்றின் பின்னணியுடன் காட்டும் இடத்தில் நெறியாளர் எமது பாராட்டைப் பெற்றுக் கொள்கிறார்.

இந்தியப்படை சிப்பாய் ஒருவன் மிகுந்த ஆசையுடன் இளநீரைக் கோதித் தின்னும் காட்சி உறை நிலைக்கு வர, நெருக்கமாக அதனையடுத்து, அதே கைகளால் வைக்கும் நெருப்பு உறைநிலைக்கு வருமிடத்தில் கமெரா தன் பணியைத் திருப்திகரமாகச் செய்கிறது.

ஊரே கொழுத்தப் படுகிறது. மக்கள் அகதியாகப் புறப்படுகிறார்கள்; நடந்தும் போகிறார்கள்; வண்டிகளிலும் போகிறார்கள். இந்த அகதி மக்கள் ஏறிய வண்டியை இழுத்துச் சென்றதுதான்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மாடுகள் செய்த குற்றமோ? மாடுகளும் அழுதுகொண்டு அகதிகளாகப் புறப்படுகின்றன.

மக்களின் சோகத்தைக் காவிச் சென்று வானத்திலே பாடிக் காட்டியதுதான் பறவைகள் செய்த குற்றமோ? குருவிகளும் கூட பறந்து அகதிகளாகின்றன. பகலில் பயணம் செய்தவர்கள் இருளுக்குள் நுழைகிறார்கள். சோக இருள், விரக்தி இருள், அச்ச இருள்! நெஞ்சை மிகவும் தொடுகின்ற காட்சி இது!

பூபதியாக நடிக்கும் திருமதி ஆரோக்கியம் இறுதிக் கணங்களில் அருமையாக நடிக்கிறார்.

அன்னையின் இறுதிப் பயணத்தில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்றும், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்திய இராணுவம் பெரியதொரு வாகனத்தில் அச்சுறுத்தல் ஒலிபரப்புச் செய்துகொண்டு செல்ல, அதற்குப் பின்னாலேயே மிகச் சாதாரணமாக ஒரு சைக்கிளில் இரண்டு பையன்கள் சிறியதொரு ஒலிபெருக்கியைக் கையில்கொண்டு, அன்னையின் இறுதி ஊர்வலத்தில் அனைத்து மக்களையும் கலந்துகொள் ளுமாறு கேட்டுச் செல்லும் முறை அற்புதம். மனம் உரத்து ஒருமுறை 'சபாஷ்' சொல்லும் இடம் இது!

மகளிர் கொண்டுவரும் மகஜரை மிகுந்த கவனத்தோடு வாங்கிப் படிப்பதுபோல் நடித்து, அவர்கள் போன கையுடன் அதைக் கசக்கிக் குப்பைக் கூடையில் போடும் முறை இந்திய இராணுவ அதிகாரிகளை நல்ல அழகாகச் சுட்டும் முறை.

பின்னால் வந்து கொண்டிருந்த இராணுவ வண்டிக்கு உரிய மரியாதை கொடுக்காமல் 'தன்பாட்டில்' சைக்கிளில் போய்க் கொண்டிருந்த பொதுமகன் பெற்றுக் கொண்ட பரிசு... அவர்களை இன்னும் விசேடமாக அடையாளம் காட்டுகிறது.

கடைகளெல்லாம் 'தடவி' அவர்கள் பொருள்கள் வாங்கிய 'முறை'களையும் நாங்கள் மனக் கண்ணில் மீளக் கொண்டுவர முடிந்தது. ஆயினும், அவர்கள் இங்கு பேசிய 'ஆங்கிலத்தை' இந்தப்படத்தில் எங்களால் கேட்க முடியவில்லை.

"ஐயாவுக்கு ஆத்திலை போற எண்ணம் போல கிடக்கு" என்று வேணுவுக்குச் சொல்லப்படும் இடம் போன்ற ஒரு சில இடங்களில் உரையாடல் எம் கவனத்தை ஈர்க்கிறது.

உண்ணாவிரதம் நடை பெறும் மேடைக்கு இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வருகிறார். இரண்டு கைகளையும் எடுத்து நிறைவாகக் கும்பிடுகிறார். பதில் வணக்கம் செய்யும் உண்ணா விரதியின் கைகள் பாதிக் கும்பிடு போடுகின்றன. இவர்கள் இருவரது மனதிலும் எழும் எண்ணங்கள் எப்படிப்பட்டவை என்பதை இந்தக் கும்பிடுதலே காட்டிவிடுகிறது. வேறு வார்த்தைகள் வேண்டியி ருக்கவில்லை. நெறியாளர் புத்தி நுட்பம் மிகுந்தவர்.

அன்னை பூபதி, சிறுவயதில் பார்த்துப் பாராமல் மற்றவர்களுக்கு உதவி செய்பவராக இருந்தார் என்று ஒரு தகவல் கூறுகிறது. இத்தகைய பண்புக் கூறுகளைக் காட்டி அந்தப் பாத்திரத்தை வளர்த்து வந்திருந்தால் ஒருவேளை இந்தத் தியாக

**ப**த்திரிகைகளில் எழுதுபவர்கள் பொறுப்பில்லாமல் எதையும் எழுதக் கூடாது. அப்படி பொறுப்பில்லாமல் சமுதாயத்திற்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய விஷயங்களை எழுதுபவர்களின் எழுத்துக்களைப் பத்திரிகை ஆசிரியர்கள் போடக்கூடாது. "உள்ளத்தில் உண்மை உண்டாயின் வாக்கில் உண்மை உண்டாகும்" என்று பாரதி சொன்னார். அந்த உண்மையை ஏற்றுக் கொண்டு செயல்பட பத்திரிகைகள் முயலவேண்டும். வெறும் வியாபார நோக்கத்துடன் பத்திரிகைகளில் எழுதுபவர்களோ, பத்திரிகை வெளியிடுபவர்களோ செயல்படக்கூடாது. விவாதங்கள் என்ற போர்வையில் பட்டிமன்றங்களுக்கும் கீழே போய்விடுகிற விஷயங்களைக் கிளறிவிடப் பத்திரிகைகள் முயலக்கூடாது. பத்திரிகைகள் நல்ல எழுத்தைத் தேடிப் பிரசுரிக்கவும், நல்ல எழுத்தைத் தேடிக் கண்டுகொள்ள வாசகர்களுக்கு உதவவும் வேண்டும். எழுத்தில் நல்ல தரத்தை எட்டாத விஷயங்களை எந்தப் பத்திரிகையும் வெளியிடக்கூடாது என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

**க. நா. சுப்பிரமணியம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மேன்மை இன்னும் சற்று ஆழமாக மக்கள் மனதில் பதியச் செய்யப்பட்டிருக்கலாம்.

"இப்போது சிறிய விடயங்களையாவது செய்; நாளடைவில் பெரிய விடயங்கள் உன்னைத் தேடி வந்து நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்." என்பது ஒரு பாரசீகப் பழமொழி. வசதிகள் எதுவுமற்ற போர்க்காலச் சூழலில் அன்னை பூபதி பற்றியதொரு பதிவு சிறிய அளவில் வந்திருப்பது பெரு மகிழ்வு தரும் விடயம். முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரே நாளடைவில் இதனை மிகப் பிரமாண்டமான தயாரிப்பாகச் செய்து தருவர் என்ற நம்பிக்கையை இது எமக்கு ஊட்டுகிறது.

'போரும் அமைதியும்' என்ற நாவலை எழுத டால்ஸ்டாய் எடுத்த காலம் ஏழு வருடங்கள். காந்தி இறந்து பல வருடங்களின் பின்னரே அவரைப் பற்றிய ஒரு திரைப்படம் நல்ல முறையில் வெளிவந்தது. இன்னும் ஒரு சில வருடங்களில் அன்னை பூபதி பற்றியும், திலீபனைப் பற்றியும் நாங்கள் அருமையான திரைப்படங்களைத் தயாரித்து மக்கள் நடுவில் உலாவிடுவோம் என்ற நம்பிக்கை 'இது எங்கள் தேசத்தை' பார்க்கிறபோது ஏற்படுகிறது.

மனிதர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்குச் சில உற்சாகமூட்டும் வெடித்தல்கள் தேவை. இது அத்தகைய ஒரு 'வெடித்தல்'. இந்தப் படத்தை ஒரு இந்திய இராணுவச் சிப்பாய் பார்க்க நேரிட்டால், "the fault dear Brutus is not in our stars, but in our selves" என்று எண்ணிக் கொள்வானாயின் அதுவே எமக்கும், அன்னைக்கும், இப்படத்தைத் தயாரித்தோருக்கும் கிடைக்கும் பெரு வெற்றியாகும்.

\- பதுமலாஞ்சனன் -



## வாதை சுமந்த தேசம்

விடிவிற்கு முந்தைய தேசம் - இங்கே
விரவிக்கிடக்குது சோகம்
பரவிடும் நோய்களில் பாதி
பட்டினியால் வரும் மீதி
மயிரிழை தன்னில் மனிதகுல
உயிரிழை காக்கும் மருந்தியலே!
மறந்திடு உந்தன் மணிமகுடம் - இங்கு
மனிதர்கள் நோயின் தங்குமிடம்

அடிப்படை மருத்துவம் இல்லை - இது
அடக்குமுறைகளின் எல்லை
மலிந்திடும் நோய்களோ தொல்லை - சிறு
வலிக்கும் நிவாரணி இல்லை.

போஷாக்கிழந்த கருவறைகள்
பிள்ளைகள் தோன்றும் கல்லறைகள்
மரணப்பொழுதில் சில ஜனனம் - இங்கு
கரணம் தப்பிட உடன் மரணம்.

இருண்ட கண்டத் திசை நோக்கி
இரக்கம் காவும் தேசங்களே!
இலங்கைத் தீவின் தமிழ்ப் பகுதி
இருளில் மூழ்குதல் எது நீதி?

மனித உரிமையின் மறுப்பகம் - இனி
மாட்டுக் குடிலும் மருந்தகம்
புனித நம் சுதந்திரப் பாதையிலே
பிணிச் சிலுவை சுமந்து அவர் பாதையிலே


விலங்கிட்ட கைகளின் மீது - வாள்
வீசிடும் வீணர் தம் அரசே!
கலங்கிட மாட்டார் சித்தம் - இது
விடுதலை வேண்டிய யுத்தம்.

\- ஞானி

ஆடி மாத எரிமலையில் வெளிவந்த
புகைப்படத்திற்கான கவிதை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிக்கல் நாளில் வலி தீருதல்

குப்பி விளக்கென்றாலும்
விடிவிளக்கொன்று
இனி எப்போதெரியும்
என் வீட்டில்?
பாலாய் ஒளியூற்றிச் சுடரும்
மின் குமிழ்கள்
இனி என்று ஒளிபரப்பும் எனது வீதிகளில்?
சிறு தளிர்களும் பூக்களும் சேர்ந்த
காற்றென்று வரும் என் சுவாசத்துக்கு?
கந்தக நெடில் பரவி
குமட்டல் எழும் இந்த இரவும்,
துயிலமறுத்து விழித்திருக்கவே
எச்சரிக்கும் மனமும் இன்னும்
எத்தனை நாளில் தொலைந்து போகும்?

விழித்திருக்கையிலும்
விசமேறிய கனவுகள்
என் நம்பிக்கைகளைத் தின்னுகின்றன;
நடுங்குகின்ற காற்றில்
துர்நாற்றம் வீசி என் சரீரம் எரிகிறது
எப்போதும் இரவுகளில்
திடீர் திடீரென
அவசரமாகப் பிள்ளையைத்
தொட்டுப்பார்த்து
அவதியுறும் துயர்
ஐந்து வயதுக் குழந்தையின் நாளைப்
பற்றியது;
அவனது எதிர்காலம்
என்னவென்று நிச்சயிக்க முடியாதுள்ளது.
அவனைப் பற்றிய திட்டங்களை
நினைக்கவே தடுமாற்றமாயுள்ளது.

எல்லாக் கேள்விகளுமே
பின்னலிடுகின்றன.
எல்லாவற்றையும் விட சிக்கலானதாக
விமானங்கள் பயணிகளையும்
ஏற்றிச் செல்லுமென்று
குழந்தைக்கு எப்படி
நம்பிக்கை கொள்ள வைப்பதென்று
புரியவில்லை எனக்கு.
முகம் வெடித்த மனிதனாக
எனது பிம்பம்
என்னைக் காட்டுகிறது.
இப்படி வாழுதல் என்பதும், மரணம்
என்பதும்
நள்ளிராப் பொழுதில்
வழியற்றிருக்கையில்
காட்டெருமை துரத்துவதைப் போல
நெரிக்கின்றன.

எனது அயலில்
காற்றில் உயிர்க்கும் நம்பிக்கைகள் பெற்ற
அற்புத மனிதர் போல
போராளிகள் செல்கிறார்கள்.
நின்று, பேசி, விடைபெற்று
வழிநெடுக புன்னகை மலர்த்தி
நம்பிக்கை மனிதர் செல்கிறார்.
எத்தனை தளிர்ப்புடன்
எனது பிள்ளை
அவர்கள் கைபற்றிப் பூக்கிறான்.
முகம் வெடித்த மனிதனாக
எனது பிம்பம்
என்னைக் காட்டுகிறது.

சிக்கல் நாளின் வலிகள் தீர
நம்பிக்கை மனிதர் கைகள் பற்றி
நடத்தல் வேண்டும் என்று துருதுருக்கிறது
வாழ்க்கையின் அழைப்பு.

- கருணாகரன் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கரும்புலிகள்

## எங்கள் போராட்ட மரபில் புதிய போர் வடிவம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனிமனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான்.



தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

இந்தப் பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது. எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக் கொண்டது. தனி மனிதனாக, எமது போராளி ஒருவன், தன்னை அழித்து, தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன் முதலாக, எமது போராட்ட வரலாறு, தியாகத்தின் அதியுன்னத ஒரு அற்புதத்தைப் பதிவு செய்துகொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும் எழுச்சியும் மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச்சாதனைகளும் எமது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தன.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம். பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக் கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்தத் தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில், நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இயக்கத்தின் தற்காப்புக் கவசங்கள். எமது போராட்டப்பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள்; அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சுபோன்ற நெஞ்சமும்

**முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர்**



கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னையே காதலிக்கிறான். தனது உயிரையே நேசிக்கிறான். உயிர் வாழவேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர் வாழ விரும்புவதால், உயிர் அற்றுப்போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்குப் பயப்படுகிறான். இது மனித இயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால், ஒரு கரும்புலி வீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது, தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலுருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகமையைப் பெறமுடியும். மனமானது பயங்களிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விடுதலை பெறும்போதுதான் வீரம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரண பயம். இந்த மரண பயத்தைக் கொன்றுவிடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகிறது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும், செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப் பெற்றிருக்கிறது.

இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. ஆளுக்கும் பெயருக்கும் அப்பால், அந்தத் தனிமனித தனித்துவத்துக்கு அப்பால் இங்கு முதன்மை பெறுகிறது. மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கியபோதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.



**உங்களுக்கு மட்டும் எங்கள்**
**உணர்வுகள் புரியும்**
**ஊமைகளாய் நாமிருக்கும்**
**காரணம் தெரியும்**
**பொங்கும் மகிழ்வோடு**
**நீங்கள்**
**போய்விடுவீர்கள்**
**போனபின்னர் நாமழுவோம்**
**யாரறிவீர்கள் ?**

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்தச் சரித்திர நாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களின் நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும்போது இனம்புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்த புனிதவாளர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே.

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


னத்தை அடக்குமுறையாளர்களின் இரும்புக் கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதிகேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கி விடமுடியாது.


இது கரும்புலிகளின் சகாப்தம்.

இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக.

---




# கரும்புலிகள் நினைவு ஒலிநாடா

## "கசெற்" இலக்கியத்தின் இன்னொரு வெளிப்பாடு

யாழ்ப்பாணத்தின் அண்மைக்கால இலக்கிய வெளிப்பாடுகளின் தன்மை ரசனை பற்றியும், அவற்றின் மக்கள் நிலை ரசனை பற்றியும் விசாரித்தறிந்த ஓர் இலக்கிய மாணவர் "கசெற் இலக்கியங்கள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

இது கருத்துள்ள ஒரு சொற்றொடராகும். 1990 முதல் மக்களின் மகிழ்வளிப்புச் சாதனங்களின் பயில்வு முடக்கப்பட்டதன் பின்னர் 'கசெற் இலக்கியங்கள்' சில புதிய பரிமாணங்களை எட்டிப்பிடித்துள்ளன. தமிழ் சினிமா வழியாகக் கடந்த இருபதாண்டுகளுக்கு மேல் ரஞ்சகப்படுத்தப்பட்ட கவிதை இசை இணைவு 1990ல் ஏற்பட்ட புதிய சவாலை ஏற்றுக்கொள்வதற்கான கலை வடிவப் பின்புலத்தைத் தந்தது. முதலில் தமிழகத்து இசைக் கலைஞர்களைப் பயன்படுத்தி வெளிவந்த ஒலிநாடாக்கள் போக, படிப்படியாக உள்ளூர்க் கலைஞர்களையே பயன்படுத்தும் முறைமை தொடங்கிற்று.

அந்த முயற்சியுடன் இன்றைய போராட்ட நிலையினை இசையில் வடித்தெடுக்கும் கலை முயற்சி கோட்பாட்டு முறையிலும், செயல்முறை நிலையிலும் வெற்றிபெறத் தொடங்கியதெனலாம்.

இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தது மூன்று 'தனிமங்களி'ன் இணைவு ஆகும். புதுவை இரத்தினதுரை என்ற கவிஞன், கண்ணன் என்ற இசையமைப்பாளன், சுந்தரலிங்கம் முதல் சாந்தன் வரை என வரும் சாஸ்திரிய மெல்லிசைக் கலைஞர் ஆகியோரின் இணைவு இந்த 'இலக்கிய இசை'க்குப் பொருளும் வடிவமும் கொடுத்தது.

"நெய்தல்" என்னும் ஒலி நாடா இந்தக் கலைக்கோலத்தின் உன்னத உதாரணமாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து இப்பொழுது "கரும்புலிகள்" என்ற இந்த ஒலி நாடா (பாடல்கள்) வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த ஒலிநாடாவில் புதுவை இரத்தினதுரையின் ஒன்பது "இசையாக்கங்கள்" இடம்பெற்றுள்ளன. கரும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புலிகளின் வீரத்தையும் தியாகத்தையும் எடுத்துக்கூறும் வகையிலமைந்த இந்தப் பாடல்களில் புதுவை-கண்ணன் இணைவின் இன்னொரு கலை உயிர்ப்பினைக் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.

இக்கட்டத்தில், புதுவை இரத்தினதுரையினதும், கண்ணனினதும் படைப்புத்திறன்களின் தளங்கள் பற்றி (மிகச் சுருக்கமாக) அறிந்து கொள்வது அவசியமாகும்.

புதுவை இரத்தின துரையின் கவிதாவன்மை அவர் வாசகர் கேட்போர் மனதிலெழுப்பும் உணர்ச்சிப் படிமங்களிலேயே தங்கியுள்ளது.

சொற்களின் ஒலி வீச்சும் அவற்றின் உணர்ச்சி வீச்சும் இணைகின்ற பொழுது கேட்போர், வாசிப்போர் உள்ளங்களிலே அந்தச் சொற்கள் சுட்டும் விடயங்கள் "காட்சிகளாக" விரியும். பாரம்பரிய வாழ்க்கை முறையின் உணர்ச்சிக் கட்டடங்களை உணர்வு மையங்களைச் சுட்டுவதன் மூலம், இழக்கப்பட்டவற்றினால் ஏற்படும் சோகத்தை எடுத்துக் கூறுவது, இவரது அண்மைக் காலத்து கவிதைகளின் ஒரு முக்கிய பண்பு. இவர் கவிதைகளிலிருந்து மேற்கிளம்பும் படிமங்கள் வெறுமனே கட்புலக் காட்சிகளாகவோ, செவிப்புலக் கிளர்வுகளாகவோ இருந்து விடாமல், அவற்றுக்கு மேற் சென்று "ஸ்பரிச உணர்வுகளாக" (அதாவது நமது உடலிலே உணரப்படுவனவான "மெய்ப்பாடு"களாக) நம்மைக் கவர்வன.

"வாசலில் காற்றென வீசுங்கள்"

"காவியச்சந்தன மேனிகளே"

என வரும் வரிகள் நமது புலப்பதிவில் ஏற்படுத்தும் நுண்ணிய தாக்கத்தினை விளங்கிக் கொண்டால் புதுவை இரத்தினதுரையின் 'நதிமூலம்' தெளிவாகிவிடும்.

இந்தக் கவிதையாக்க ஆற்றல் இணையும் இசையுடன்




இயைந்து உயிர்ப்புக் கொடுக்கும் குரல்கள் மூலமாக வெளிவரும் பொழுது, இந்தக் காலகட்டத்தின் மானுடதாகங்களும், மனித ஓலங்களும் கலைப்பதிவு பெற்றுவிடுகின்றன.

புதுவை இரத்தின துரையின் கவிதையின் உயிர்ப்பை எடுத்துக் காட்டுவதாகவும் அந்தக் கவிதைக்குள்ளிருக்கும் ஒத்திசையின் கருத்துத் தொனிகளை வெளிக் கொணருவதாகவும் அமைவது கண்ணனின் இசை.

கண்ணனின் இசையாக்கத்தில் அவர் 'மெட்டு'க்களை (MELODY) உருவாக்கும் முறைமை முக்கியமானதாகின்றது. அருபமான ஒலிக்கு ஒரு ஒழுங்கமைதிப்பட்ட 'உருவம்' அமைக்க முனையும் பொழுது 'மெட்டு' உருவாகின்றது. இந்த உருவாக்கத்தின் அழுத்தங்கள், மிடற்றால், வாத்தியத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன. கண்ணன் தனது இசையாக்கத்தின் உயிர்ப்பு மையங்களை அழுத்திக் காட்டுவதற்கு நரம்பு வாத்தியங்களையே பெரும்பாலும் பயன்படுத்துவார். வயலின், சித்தார், 'ஓகனி'ல் வரும் கலப்போசைகள் இவரின் இசையமைப்புக்கான வாத்தியங்களாகவும் ஏற்ற இறக்கக் குறியீடுகளாகவும் அமைகின்றன.

கர்நாடக சங்கீதத்தின் சாஸ்திரிய வளத்துக்குள் நின்றுகொண்டு இந்த உணர்ச்சி நெகிழ்வுகளைக் கண்ணன் ஏற்படுத்துகின்றார்.

கண்ணனின் இந்த இசையாக்க முறைமை, புதுவை இரத்தினதுரையின் அடிநாதமான மானுடதாக வெளிப்பாடு, பண்பாட்டுப் படிமச்சித்தரிப்புடன் இணைகின்ற பொழுது அற்புதமானதோர் இலக்கிய இசைக்கலவை ஏற்படுகின்றது.

இந்த ஒலி நாடாவில் அந்தக் கலவை இரண்டு பாடல்களில் அற்புதமாக இணைந்துள்ளது. "இங்குவந்து பிறந்த பின்பே இருந்த இடம் தெரியும்" என்ற பாடலும்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


"போரம்மா" என்ற பாடலும் இந்த இசையைக் காட்டு கின்றன.

இவற்றின் இந்த வெற்றிக் குக் காரணம் இந்தக் கவி தையும், இந்த இசையமைப்பும் வேண்டிநிற்கும் "குரல்" வந்து பொருந்தியுள்ளமைதான்.

மற்றைய பாடல்களில் ஒன்றையொன்று தங்கி நிற்க, இந்த இரண்டு பாடல்களிலும் அந்தக் கலவை (MIXTURE) சேர்வை (COMPOUND) ஆகிறது.

ஆனால் புதுவை கண்ணனின் 'இந்த இணைவு ஒட்டுமொத்தமான ஒரு ஒத்திசைவுத் தோற்றத்தினை (ENSEMBLE- அதாவது இன்னொரு நிகழ்வின் இசைப் படிமமாகத் தருதலை) ஏற்படுத்துகின்றன. "போரம்மா" என்ற பாடல் இதனை நன்கு புலப்படுத்தும்.

இத்தகைய இசையமைப் புக்கள் கேட்பதற்கு ரம்மிய மானவை. ஆனால் அதைக் கேட்பவர்கள் தங்கள் வாய் விட்டுப்பாட முடியாத அளவுக்கு இசைச்சிக்க லானவை.

ஆனால் வெகுசன நிலையில் வாய்விட்டுப் பாடக்கூடியவையே சமூக ஒருங்கிணைப்புக்கான பாடல் முறையாகும்.

அந்த அம்சம் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

கரும்புலிகள் ஒலி நாடாவின் வெற்றிக்கு ஒலிப்பதிவுத் தொழில் நுட்பம் பெரிதும் உதவியுள்ளது என்பது அதனைக் கேட்கும்பொழுது நன்கு மனதிற் பதிவாகின்றது.

தனிப்பட்ட கலைத் திறன்கள் இணையும்பொழுது சமூக ஒருங்கியைபினையும், ஒத்தியைபினையும் எடுத்துக் காட்டும், வற்புறுத்தும் கலை யாக்கங்கள் தோன்றுகின்றன.

அதற்கான ஒரு நல்ல எடுத்துக்காட்டு "கரும்புலிகள்" ஒலி நாடா.

**கா.சி.**

---

# கரும்புலிகள் நினைவாக ஒரு பாடல்

## தொகையறா

ஊரறியாமலே....... உண்மைகள் கலங்கும்
ஒருபெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே....... விழுதினைப் புரியும்
வெடிமருந் தேற்றிய வேங்கையைத் தெரியும்.

## பல்லவி

சாவினைத் தோள்மீது தாங்கிய, காவியச்
சந்தன மேனிகளே உங்கள்
ஆவிகலங்கிய அக்கணப் போதினில்
ஆரை நினைத்தீரோ?

வாசலில் காற்றென வீசுங்கள் உங்கள்
வாய்திறந்தோர் வார்த்தை பேசுங்கள்.

## சரணம்

வென்றிடவே கரும் வேங்கைகள் ஆகிய
வீரக் கொழுந்துகளே! எம்மைக்
கொன்றவர் மீதினில் குண்டெனப் பாய்கையில்
என்ன நினைத்தீரோ?

தாயகத் தாகங்கள் தாங்கிய நெஞ்சினில்
சாவைச் சுமந்தவரே! உங்கள்
தேகங்கள் தீயினில் வேகின்ற நேரத்தில்
ஆரை நினைத்தீரோ?

தாலாட்டுப் பாடியே தன்முலை யூட்டிய
தாயை நினைத்தீரோ? உங்கள்
காலாறத் தோள்மீது தாங்கிய தந்தையின்
கையை நினைத்தீரோ?

நாளும் விடுதலைத் தீயில் குளித்திடும்
நாயகனை நினைத்தீரோ? உங்கள்
தோளைத் தடவியே சென்றுவா என்றவன்
சோகம்தனை நினைத்தீரோ?

*புதுவை இரத்தினதுரை*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிமிர்தல்

கிரிஷா ஜொவித்தர்

தூக்கத்துடன் தோற்றுப்போய் நினைவுகளுக்குள் சிக்குண்டிருந்த நித்தியாவின் நரம்புகளை ஒருகணம் நினைவிழக்கச் செய்தது, அந்த அம்புலன்சின் 'சைரன்' ஒலி. முத்து முத்தாக வியர்வைத் துளிகள் தலையணையை நனைத்தன. 'சைரன் ஒலி அவளையும் மீறி, அவள் கடந்த நினைவுகளை ஊடறுத்துத் தொலைவில் ஒரு வருடத்திற்கு முன்னால் தரித்தது.

எஸ்லோன் பைப்புகள், பூட்ஸ் கால்கள் அவளைச் சித்திரவதை செய்து சின்னாபின்னப்படுத்திய அந்த அந்நியப் பேய்களின் மறந்து போயிருந்த உருவங்கள் எல்லாமே நிழற்படமாய்த் தெரிய, அந்த இருட்டறைச் சுவர்களில் படிந்திருந்த இரத்தக்கறைகளைப் பார்த்தபடி நினைவிழந்துபோகும் நித்தியாவைத் தினமும் தட்டியெழுப்பும் அந்த 'சைரன்' ஒலி. அது கூட நினைவுகளில் தெளிவாகக் கேட்டது. இந்த மண்ணைத் தன் எழுத்துக்களால் உயிர்ப்பிக்க முற்பட்டதாக அவலங்களைச் சுமந்து கொண்டவளுக்கு ஒரு வருடத்தின் பின் அன்று விடுதலை. "என்ரை ஆசை மகளுக்கு இப்ப மூன்று வயதாயிருக்கும்." நித்தியாவின் நினைவுகள் தன் செல்ல மகள் சாதனாவையே சுற்றிச் சுற்றி வந்தன. கூடவே தான் சுவாசிக்கப் போகும் அந்த செம்பாட்டுக் காற்று, தன்னை ஆவலோடு எதிர் கொள்ளப்போகும் நேசிப்புக்குரிய முகங்கள் எல்லாம் கற்பனையில் இனித்தன. வெளியே வந்த அடுத்த கணமே அவையெல்லாம் இடிந்துபோன இனிமைகளாய் மாற, ஒரு கணத்தில் சாகவேண்டும் என்று கூட கலங்கிப் போனாள். ஊரே திரண்டுநின்று அவளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டது. எல்லாமே நித்தியாவின் மனத்திடனின் முன் தோற்றுப் போயின. சாதனா, நித்தியாவின் வேதனைப் புண்களுக்கு நல்ல மருந்தானாள். கனடாவிலிருந்து வரும் கணவன் டேவிட்டின் கடிதங்கள் அவளுக்கு வாழ வேண்டுமென்ற துணிவை ஊட்டின. திடீரென ஒருநாள், அவன் வரப்போவதாகக் கடிதம் வந்தது. நித்தியா பூரித்துப்போனாள். அவனால் மட்டுமே உணரக் கூடியதாக இருக்கும் தன் உணர்வுகளை அவனிடம் கொட்டித் தீர்க்க துடித்துக் கொண்டிருந்தாள். மீண்டும் வீட்டைக் கடந்துபோன அம்புலன்சின் 'சைரன்' ஒலி நித்தியாவின் கடந்த நினைவுகளை விரட்டி, அவளை நிஜத்துக்குள் இழுத்து வந்தது. "எங்கேயோ அடிபாடு போல, கடவுளே அவங்களைக் காப்பாத்து." மனதிலே அடிக்கடி வேண்டியபடி அப்படியே தூங்கிப் போனாள்.

* * *

அன்றோடு டேவிட் கனடாவால் வந்து ஒரு மாதம் ஓடிவிட்டது. அவனைக் கண்ட மகிழ்ச்சியில் சாதனா ஓடியாடி உலாவருவதை ரசிப்பதிலேயே நித்தியாவின் நாட்கள் கழிந்தன. டேவிட் முன்பு போலத்தான் சாதாரணமாகவே இருந்தான். அந்த வீட்டிலே எதுவுமே நடக்காதது போலவும், தான் புதிதாக வந்தவன் போலவும்.... நித்தியாவின் மனதில் இனம்புரியாத குற்ற உணர்வொன்று குடைந்து வருத்தத்தை உண்டாக்கியபடியிருந்தது. "எல்லாத்திலும் சாதாரணமாயிருக்கிறவர், ஏன் என்னோட மட்டும் நல்லா மனம்விட்டுக் கதைக்கிற சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை, இவர்கூட....சீ... நிச்சயமாய், நிச்சயமாய் இருக்காது; இருக்கவும் கூடாது." நித்தியாவின் மனம் ஈனமான குரலில் அழுதது.

டேவிட்டும் அவளும் சந்தித்துக் கொண்டது வித்தியாசமான நிகழ்வுகள். அவர்கள் இருவரினதும் காந்தம் மிக்க எழுத்துக்களும் அவர்களை இணைய வைத்தன. டேவிட்! அந்தப் பெயரின் பின்னால் நித்தியாவின் இலட்சியமே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


உருவாகியிருந்தது. எத்தனை புரட்சி எழுத்தாளன்! அவனது எழுத்துக்களின் வடிவங்கள், சமுதாயப் புண்களுக்கு மருந்தாக அமைந்ததில் வியப்பொன்றுமில்லை.

**ஓவியம்: மகா**

நித்தியா! அவள் கூட டேவிட்டுக்கு சளைத்தவள் அல்ல. ஆக இருவருடைய எழுத்துக்களுக்குமிடையே டேவிட், இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டுமென புரட்சியாக வெடிப்பான். நித்தியா, சமுதாயத்தின் யதார்த்த நிகழ்வுகளை அப்பட்டமாக, ஆனால், அமைதியாகச் சொல்வாள். துருவங்கள் இரண்டும் இணைந்துகொண்டன.

வாழ்க்கை பற்றிய எண்ணற்ற கற்பனைகளுடன் நித்தியாவின் புதிய வாழ்க்கை ஆரம்பமானது. எழுத்துக்களை வாழ்க்கை மூலம் நிஜமாக்க பெரிய சித்திரம் ஒன்றையே மனதில் தீட்டியிருந்தாள்.

அன்று அவள் முதற் தோல்வியைத் தன் வாழ்வில் சந்தித்த நேரமது. "நித்தியா! ஆர் என்ன சொன்னாலும் சரி, நான் கனடாவுக்குப் போறது போறதுதான்" உறுதியாகச் சொன்ன டேவிட்டின் கால்களைப் பிடிக்காத குறை. நித்தியா அழுதழுது களைத்துப்போனாள். "உங்கட எழுத்துக்கள்...." ஆரம்பித்த நித்தியாவைப் பேசவிடாது டேவிட் இடைமறித்தான். "நானும் நீயும் சந்தோசமாய் இருக்கோணும் எண்டால், அதுக்கு காசு, காசு, காசு வேணும்." கற்பனையில் அவள் வரைந்த வாழ்க்கைச்



சித்திரத்தில் யாரோ தாறுமாறாக நிறங்களைக் கொட்டுவது போலிருந்தது. இதற்குப் பிறகு நித்தியா எதுவுமே பேசவில்லை.

அம்மா! சாதனாவின் பிஞ்சுக் கைகள் நித்தியாவைத் தடவின. நினைவுகள் நிஜத்துக்கு வர ஆதரவாய் அந்தப் பிஞ்சுக் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். "அம்மா, இரண்டு மாமாக்கள் வந்திருக்கினம்." சாதனா விறாந்தையைக் காட்ட "ஓ... ராஜனும் வினோத்தும்." சொன்னபடி அறைக்கதவைத் தாண்டும் போது நித்தியாவுக்கு மின்னலாய் ஒரு நினைவு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தாக்க, சாதனாவின் காதுக்குள் மெதுவாக, "அப்பாவையும் வரச் சொல்லுங்கோ" சொல்லிவிட்டு விறாந்தைக்குச் சென்றுவிட்டாள்.

"அக்கா, வேலையாகவே இருந்தனீங்க?" ராஜனதான் ஆரம்பித்தான். "இல்லை, சும்மாதான்." அவள் சொல்லவும், டேவிட் விறாந்தைக்கு வரவும் சரியாயிருந்தது. டேவிட்டைப் பற்றி அவர்களுக்கு நித்தியா நிறையவே சொல்லியிருந்ததால், அவர்கள் புரிந்து கொண்டவர்களாய், இயல்பான சிறிய புன்னகையை முகத்தில் வரவழைத்தனர். "அக்கா, நீங்கள் எழுதின 'உண்மைகள்' எண்ட கதையை நேற்றுக் கிடைச்ச பேப்பர் ஒண்டில வாசிச்சன். என்ன, கசப்பான உண்மைகளைத் தெளிவாக் காட்டியிருக்கிறியள். அட்டகாசம்." இது ராஜனின் அபிப்பிராயம். "ஓம். நிஜத்தில ஏற்றுக்கொள்ள மறுக்கிற இந்த சமுதாயம் எழுத்துக்களில அதை மாலை போட்டு, பரிசளிச்சு வரவேற்கிது." விரக்தியாய் நித்தியாவிடமிருந்து எழுந்த வார்த்தைகள். "இல்லையக்கா, ஒருநாளைக்கு இந்த சமுதாயத்தில எழுத்துக்கள்தான் நிஜமாகப் போகிது." உறுதியாய், உரமாய்ச் சொன்ன ராஜனின் முகத்தில் ஏகப்பட்ட உணர்வுகள். டேவிட் முகத்தில் எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாது, தனக்கும் அவர்கள் உரையாடலுக்கும் சம்பந்தமில்லாதது போலிருந்தான். நித்தியாவுக்கு இதயத்தினை வண்டு ஒன்று துளைப்பது போன்ற விசித்திர வேதனையை அது உண்டாக்கியது. "ஒருவேளை, இவர்கூட இந்த சமுதாயம் போல.... இல்லை, அப்பிடியிருக்காது." அடிக்கடியெழும் இந்த கசப்பான நினைவை மனதிலிருந்து எழவிடாமல் விரட்டிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் சென்று வெகுநேரமாகியும் நித்தியாவும், டேவிட்டும் எதுவுமே பேசவில்லை. சாதனாதான் அவர்கள் இருவரிடையேயும் பாலம்போல தொழிற்பட்டுக் கொண்டிருந்தாள். டேவிட்டின் எழுத்துக்களில் நூல் வடிவம் பெற்றவை ஒரு புத்தக றாக்கை நிறையவும் அடுக்கப்

# ஓநாய் பேசிய நியாயம்

ஓர் ஆட்டுக்குட்டிக்குத் தண்ணீர்த் தாகம் எடுத்தது.

கண்களில் தென்பட்ட ஓர் ஓடைக்குச் சென்று ஆவலுடன் நீரைக் குடிக்க முயன்றது.

அந்தச் சமயத்தில் ஒரு ஓநாய் அந்தப் பக்கமாக வந்தது. நன்கு கொழுத்திருந்த ஆட்டுக்குட்டியைக் கண்டதும்அதை அடித்துத் தின்னவேண்டும் என ஆசைப்பட்டது.

அதனால் அந்த ஆட்டுக்குட்டியை, வலுச்சண்டைக்கு இழுத்தது. "அடே ஆட்டுக்குட்டி" என்று கூச்சல் போட்டது. "நான் தண்ணீர் குடிப்பதற்கு முன் எதற்காக தண்ணீரைக் . கலக்குகிறாய்?"என அதிகாரத்தொனியில் வினவிற்று.

நடுநடுங்கிப்போன ஆட்டுக்குட்டி "ஐயா, தண்ணீர் உங்கள் பக்கமிருந்துதானே என் பக்கம் வருகிறது. நீங்கள் அருந்தும் நீரை நான் எவ்வாறு கலக்க முடியும்?" என்று கூறீற்று.

"அதிருக்கட்டும் சற்று முன் நீ ஏன் என்னைத் திட்டினாய்?" என ஓநாய் அதட்டியது.

"இப்பொழுதுதானே நான் தங்களைப் பார்க்கிறேன். சற்று முன் எவ்வாறு திட்டியிருக்க முடியும்?" என்று பயந்த குரலில் ஆட்டுக்குட்டி கேட்டது.

"சற்று முன் என்றால் போன ஆண்டு என்று அர்த்தம். போன ஆண்டு நீ ஏன் என்னைத் திட்டினாய்?" என்று ஓநாய் அமர்த்தலாகக் கேட்டது.

"சென்ற ஆண்டு நான் பிறக்கவே இல்லையே." என்று ஆட்டுக்குட்டி கூறீற்று.

"நீ பிறக்காவிட்டால் என்ன! உன் பெற்றோர்கள் என்னைத் திட்டியிருப்பார்கள். எப்படியும் நீ குற்றவாளிதான். உன்னைச் சும்ம விடக்கூடாது." என்று கூறியவாறு ஓநாய் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றுவிட்டது.

வன்முறைப் புத்தி கொண்டவர்கள் எந்த நியாயத்துக்கும் கட்டுப்பட மாட்டார்கள். தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்துக்கும் இது பொருந்தும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பட்டிருந்தன. "ம்....... எத்தனை இனிய நாட்கள் அவை." நித்தியாவால் இப்படிப் பகிரங்கமாக பெருமூச்சுவிட மட்டும்தான் இப்போது முடிந்தது.

நித்தியா! டேவிட்டின் இந்த அழைப்புக் குரலில் அதிகாரமான இனம்புரியாத அழுத்தம் ஒன்று தெரிந்தது. என்ன என்பது போல நித்தியா ஏக்கமாக அவனைப் பார்க்க, "அப்போத வந்தவங்களைப் போல ஒவ்வொரு சாட்டுகளோட நெடுக இங்க ஆம்பிளையள் வாறது எனக்குப் பிடிக்கேல்ல." தெளிவற்று வெளிவந்த டேவிட்டின் வார்த்தைகளை விளங்கிக் கொள்ளவே நித்தியாவுக்கு நேரமெடுத்தது. "உன்ரை எழுத்துக்கள் உன்னை நாசமாக்கினது இனிக்காணும். கடிதத்தில என்ரை அக்கா கனடாவுக்கு உன்னைப்பற்றிக் கட்டுக்கட்டா எழுதினதை யெல்லாம் சும்மா கிழிச்சுக் கூடைக்க போட்டது எவ்வளவு பிழையெண்டு இப்ப தெரியுது. இனி நீ ஏதாவது எழுதுறன் எண்டு சொன்னா?" டேவிட்டா இப்படியெல்லாம்? இது கனவாய் இருக்குமோ என்றுகூட நித்தியாவுக்கு ஐயமாயிருந்தது.

"ஏனப்பா இப்படி அநியாயமா குற்றம் சொல்லுறியள்? அதுகள் என்ர சொந்தச் சகோதரங்கள விட மேலானதுகள். அதுகளப் போய்..." அழுகையாய் வெடித்தது நித்தியாவின் குரல்.. "ஓ.... என்ன விட உனக்கு அவங்கள் மேலாப் போயிட்டாங்கள்" குரூரமாய் ஒலித்தது டேவிட்டின் குரல். "ஐயோ! கடவுளே ஏன் இப்படி என்னைச் சோதிக்கிறீர்?" நித்தியாவுக்கு டேவிட்டை ஏறெடுத்துப் பார்க்கக்கூட வெட்க மாயிருந்தது. ஒன்றுமறியாத சாதனா பயத்தில் கதவுக்குப் பின்னால் மறைந்தபடி நின்றாள். கண்கள் இரண்டும் நீர்முட்டி, பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

"நீ கெட்டுப் போனவள் எண்டு தெரிந்தும் உன்னை ஏற்றன் பார். அதுக்கு எனக்கு நல்ல தண்டனை. அதுதான், உனக்கு வெட்கம் எண்டது இருந்தால்தானே......" தொடர்ந்து வந்த டேவிட்டின் வார்த்தைகளைக் கேட்க முடியாது காதுகளைப் பொத்தினாள் நித்தியா. யார் யாரோ எல்லாம் முன்னால் சொன்னபோதுகூட கவலைப்படாதவள், முதன் முதல் தன் கணவன் வாயால் அதைக் கேட்டபோது, "காதை நல்லாப் பொத்து. ஊரே உன்னைப் பார்த்துச் சிரிக்கேக்க, காறித்துப்பேக்க எங்க போய் ஒழிஞ்சனி?" இந்த வார்த்தைகள் நித்தியாவின் உறக்க உணர்வுகளை தட்டியெழுப்பின. "யாரோ மிருகங்கள் செய்த தவறுகளுக்காக அப்பாவிப் பொம்பிளையள் சாகோணும் எண்டா..." தொடர்ந்து அவளைப் பேசவிடாது விம்மல் தொண்டையை அடைத்துக் கொண்டது. முதல் தடவையாக எதிர்த்து எழுந்த நித்தியாவின் குரல் டேவிட்டை ஒருகணம் அதிர வைத்தது. அதிர்வின் எதிரொலியாக நித்தியாவின் கன்னம் சிவந்துபோனது. இதுகூட அவளுக்கு புதிதில்லைத்தான்.

சலனமின்றி வெளிவந்தது நித்தியாவின் குரல். "உங்கட எழுத்துகள் எத்தினை புரட்சிப் பூக்களை உண்டாக்கின. தயவு செய்து எல்லாமே போலியாகப் போக இடங்கொடுக் காதைங்கோ." "என்னடி, எழுத்துகள் எல்லாம் பொழுது போக்குக்கெண்டு அண்டைக்கு நான் எழுதினது. அதால வருமானத்தோட கூடப் பெருமையும் கிடைச்சுது. அவ்வளவுதான்." பெரிதாகச் சிரித்த டேவிட்டின் சிரிப்பும் வார்த்தைகளும் நித்தியாவுக்குள் ஒரு பூகம்பத்தையே கிளப்பின.

"உங்கள மாதிரிப் போலி முகமூடிகளை நம்பி இந்த சமூகம் ஏமாந்ததோட, என்னையும் நான் ஏமாத்திப் போட்டன்." முடிவாக வெளிவந்தன அவள் வார்த்தைகள். ஆவேசமாய் எழுந்தவள், அவன் எழுதிய புத்தகங்கள் எல்லாவற்றையும் இழுத்துக் கீழே போட்டு.... கண நேரத்தில் எல்லாம் சுவாலையாய் எரிந்தன. "அண்டைக்கு என்னைச் சின்னாபின்னமாக்கின அந்த ஜடங்களும் நீங்களும் ஒன்றுதானே; உங்களுக்கு என்ன வித்தியாசம்?" சொல்லிவிட்டு அழுதுகொண்டிருந்த சாதனாவைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். அந்த நிகழ்வுகளைத் துளியும் எதிர்பாராத டேவிட் சற்றுக் கலங்கித்தான் போனான்.


"எத்தின நாளைக்கு உன்ர கற்பனை எழுத்துகள் உன்னைத் தாங்கிப் பிடிக்கிது எண்டு பார்க்கத்தான் போறன். ஒரு நாளைக்கு நீ என்னெட்டை மண்டியிட்டு மன்னிப்புக் கேக்காட்டி என்ரை பேரை நான் மாத்தி எழுதுறன்" ஆண் என்ற மமதையில் எல்லையற்று எல்லாமே சொல்லலாம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எல்லாமே சொல்லலாம். பொம்பிளையள் எண்டா போடுதடி தானே என்ற நினைவுடன் கொட்டிவிட்டு, பெட்டியோடு வாசலைக் கடந்து போய்விட்டான். சிலையாகிப் போன நித்தியாவுக்கு, நாளை சமுதாயம் தன்னைப் பார்த்து பரிகசிக்கப்போவது தெரிந்தது.

"இவள் புருஷனைத் துரத்தி விட்டிட்டு தன்ர இஸ்டத்துக்கு திரியிறாள். மானமுள்ள பொம்பிளை யெண்டா அண்டைக்கே செத்திருப்பாள்." ஊரே திரண்டுவந்து முன்னால் நின்று சொல்வது போலிருந்தது. ஒரு கணம் கண்களை இறுக மூடித் தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். சமுதாயத்தில் டேவிட்டைப் போன்று கிழிக்கப்படவேண்டிய முகமூடிகளின் எண்ணிக்கை எண்ணற்று நீண்டு தெரிந்தது. தன் பேனாவை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண் டாள். எங்கட பிள்ளைகளின்ர கைகளிலிருக்கும் துப்பாக்கிகள் சுதந்திர தேச எல்லையை மீட்பதற்கும், தன் கைகளிலி ருக்கும் பேனா, சுதந்திர தேசத்தை செழிக்கச் செய்வ தற்கும், தேசத்துள்ளிருக்கும் களைகளை அகற்றவும் உயர்ந்து நிற்பதை நினைக்க நித்தியாவுக்கு உடலே புல்லரித்தது. இப்போது அந்த 'சைரன்' ஒலி, பூட்ஸ் கால்கள், எஸ்லோன் குழல்கள், மிருக ஜடங்கள்; ஏன் டேவிட்டின் நினைவுகள் கூட மறந்துபோய்விட்டது. நினைவெல்லாம் எழுத்துக்கள், எழுத்துக்கள், எழுத்துக்கள்.



## வரலாற்று நூலகம்

சிங்கள இனவெறித்
தீயில் கருகியது
நூல்களேயன்றி
மொழியல்ல!

சிங்கள காடையர்களால்
உருக்குலைந்து நிற்பது
கட்டிடமேயன்றி
தமிழினமல்ல!

களத்தில் போராடும்
தமிழினத் தணல்களே
நடமாடும் நூல்கள்
நீங்களல்லவோ!

தனிநாடொன்று மலர்ந்ததும்
தமிழீழமே
வரலாற்று நூலகமென்று
நாளைய உலகின்
வரலாறு கூறும்.

விடுநர்: செந்தமிழினியவன், புதுச்சேரி, இந்தியா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# "இன்குலாப் கவிதைகள்" ஒரு பார்வை

விடுதலைக்காக தமிழீழ மண்ணில் புல்லும் எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டிருக்கிறதை முகமாகக் கொண்டு "இன்குலாப் கவிதைகள்" எனும் கவிஞர் இன்குலாப்பின் கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது.

விடுதலைக்காக குரல் கொடுக்கின்ற உண்மைக் கவிஞன்தான் இன்குலாப். உலகில் மனிதன் எங்கெல்லாம் அடக்கி ஒடுக்கப்படுகின்றானோ, அவனோடு எங்கிருந்தாலும் தோழமை கொண்டு நிற்கின்ற மனிதநேயம் அவருடைய கவிதைகளில் நிறைந்திருக்கின்றது.

தமிழக முற்போக்கு கவிஞர்களின் வரிசையில் முதன்மைக் கவிஞராக எண்ணப்படுகின்ற இவருக்கு தமிழீழ விடுதலைக்காக போராடுகின்ற போராளிகளை நேரில் கண்டு, உரையாடி, மகிழ்ந்த அனுபவங்கள் நிறைய இருந்திருக்கின்றது.

தடாச்சட்டங்களாலும், இன்னும் பல கொடுமையான சட்டங்களாலும் தமிழீழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையேயான சகோதர உறவை முறித்துவிட, முடுக்கிவிடப்படும் செயல்களால் அந்தப் போராளிகளை, அவர்களின் முகங்களைக் காண முடியாத ஏக்கம் கவிய, அழுகின்ற நெஞ்சங்களாக அந்தக் கவிதைகள் இருக்கின்றன. இனிய உறவுக்காரர்களாக இருந்து, களத்தில் அவர்கள் வீர மரணம் அடைந்த செய்தி கேட்டு, அந்த அரிய உறவுகளின் உயிர்த்துடிப்புள்ள உணர்வுகளை உச்சரிக்கின்றன அவரது கவிதைகள்.

"மானுட வண்ணங்கள் அனைத்திலும்
மறைந்தறியாத புன்னகையோடு
களத்தில் நிற்பார்கள்
இல்லையேல்
நாம் உயிர்க்கும்
காற்றில் இருப்பார்கள்"

36 பக்கங்களைக் கொண்ட இக்கவிதை நூலின் அத்தனை பக்கங்களும் அருமையானவை. விடுதலையை, போராளிகளை, எமது தேசியத் தலைவனை, வீரத்தை, மாவீரர்களை, வெற்றியை அவை பாடுகின்றன. யாவற்றையும் மீறி அந்தக் கவிதைகள் சத்தியம் வெல்லும் என்கிற நம்பிக்கையோடு முகை அவிழ்த்துள்ளன.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதும், இந்திய இராணுவம் அமைதிப்படையென தமிழீழத்தில் காலடி எடுத்து வைத்ததும், இன்குலாப்பின் கவிதைகள் போர் தொடுக்கின்றன. இதுதான் அவனின் உண்மை உருவம் என முகத்திரை கிழிக்கின்றன.

"உதட்டில் நெளியும் சாத்வீக மந்திரம்
உளத்தில் ஆயிரம் ஓநாயின் ஊளை"

எதிரியின் மாயத்தை எங்கே புரிந்து கொள்ள முடியாது போய்விடுவார்களோ என்ற மெல்லிய ஆதங்கத்தோடும், தமிழீழ விடுதலைப் போராளிகளையும், தலைவரையும், அந்த மக்களையும் அறிந்து வைத்ததன் நம்பிக்கையோடும்

"இந்த எதிரியைப் புரிந்தவர் எவரோ
புதிய வரலாற்றைப் படைப்பவர் அவரே"

தம் முன்னோக்கிய பார்வையை உறுதியோடு தம் கவிதையில் முழங்குகின்றார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், விடுதலைக்கான எழுச்சி வரிகளாகவும் திகழுகின்ற இன்குலாப்பின் கவிதைகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உள்ளங்களும் திளைக்க வேண்டும் என்கிற அவாவில் இதனை விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் மறுபதிப்புச் செய்திருக்கிறது. இந்தக் கவிதைகள் உங்களோடு பேசுகின்றதை, உங்களோடு துடிக்கின்றதை, விடுதலையை அவாவிநிற்பதை, மானுட நேயத்தைப் போற்றுகின்றதை நீங்களும் உணருவீர்கள். இப்பெரும் உணர்வுகளை இச்சிறுநூல் அடக்கி வைத்திருப்பதே அதன் வெற்றியாக இருக்கிறது.

**ஆதவன்**

www.tamileelamarchive.com

 தமிழீழ ஆவணக் காப்பகம்

இன்றைய உலகின் இயங்கு திசையுடன் இணைந்து தமிழ்த் தேசிய இனமானது தனது இலட்சிய இலக்கினை நோக்கி மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இந்தப் போராட்ட நகர்வில் அசையும், அசையாச் சொத்துக்களின் இழப்புக்களும், பெறுமதிமிக்க மனித இழப்புக்களும் ஏற்பட்டாலும் இந்த இழப்புக்கள் யாவற்றையும் ஒரு அசாத்திய மனஉறுதியுடன் தாங்கிக் கொண்டு அழுகைக்கும் விம்மல்களுக்குமிடையே அடுத்த சந்ததியின் எதிர்கால நலன்களை மனதிருத்தி மென்மேலும் உறுதிபெற்று முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டம் அவ்வப்போது ஏற்படுகின்ற திருப்புமுனைகளூடாக முன்னிலும் வேகமாக ஒரு பாய்ச்சலில் தடைகளைக் கடந்து முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.



திலீபன்

ஆக்கிரமிப்புக்கு எதிரான

# குறியீடு

தமிழீழப் போராட்ட வரலாற்றில் பல திருப்பு முனைகள் இருந்தாலும் 1987ம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் வருகையினூடாக ஏற்பட்ட திருப்புமுனையானது தமிழீழ மக்களின் விடுதலைப் பற்றை மேலும் உறுதி கொள்ள வைத்ததுடன் போராட்டத்தைப் பலப்படுத்தி நகர்வுகளை முன்னெடுக்கும் உந்து சக்தியையும் ஏற்படுத்தியது.

உலகுக்குக் காந்தியம் போதித்துக் கொண்டு அதே வேளையில் தனது வல்லரசுப் பசிக்கு தீனி போட முயல்கின்ற இந்தியா, இந்தியாவின் வரையறுக்கப்பட்ட எல்லைக் கோட்டுக்குள் வாழ்கின்ற தேசிய இனங்களின் எழுச்சிகளை மழுங்கடிக்கச் செய்து அல்லது கொன்றொழித்து வருகின்ற அதேவேளை ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதாக அல்லது விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுப்பதாக ஒரு பொய்த் தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை வேரோடு பிடுங்கியெறிவதற்காக அமைதிப்படை என்ற போர்வையில் தனது இராணுவத்தை நேரடியாக தமிழீழப் பிரதேசங்களில் கொண்டு வந்து இறக்கியது.

இந்த அமைதிப்படை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வெறும் மாயமான் என்று அறியாத தமிழீழ மக்கள் இவர்களை மாவிலைத் தோரணங் கட்டி, மகரகும்பங் களுடன் வரவேற்றது உண்மை தான். நாட்கள் சென்றன. லங்கா இராணுவ அடாவடித் தனங்களும் சிங்களக் குடியேற் றங்களும் முன்னிலும் பல மடங்கு வீரியம் பெற்றன. அமைதிப்படை அமைதியாக இருந்தது. தமிழீழ மக்கள் யாருடனும் கலந்து கொள்ளாமல் தமிழீழ மக்கள் சார்பில் இந்தியாவும் சிறிலங்காவும் செய்த ஒப் பந்தம் அப்படியே இருந்தது. அற்ப சொற்ப சலுகைகளைக் கொண்ட ஒப்பந்தச் சரத்துக் களைக் கூட லங்கா அரசு அப்பட்டமாக மீறிய போதும் அமைதிப்படை அமைதியாக இருந்தது. ஆயுத ஒப்படைப்பு நடைபெற்ற பின்பு தமிழீழ மக்களின் பாதுகாப்புக்கு இந்தியா உத்தரவாதம் அளித்த பின்பும் கைதுகள் நடை பெற்றன; குடியேற்றங்கள் தொடர்ந்தன. விடுதலைப் போராளிகள் இந்தியாவிலிருந்து இறக்கப்பட்ட துரோகக் குழுக் களால் கொல்லப்பட்டனர். லங்கா பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்பட்டன. விடுதலைப் போராட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண் டிருந்தது.

அந்த இடைப்பட்ட காலம் குழப்பம் நிறைந்த, மயக்கமானதாக இருந்தது. இந்திய மாயமானை ஒரு வழிகாட்டியாக எண்ணியிருந்த மக்களுக்கு இந்த மயக்கத்தைப் போக்கவேண்டிய அவசியம் எழுந்தது. இந்தியாவின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டிய தேவை நேர்ந்தது. காந்தீயப் போர்வைக்குள் பதுங்கிக்கொண்ட இந்தியாவை சர்வதேசத்தின் முன் தோலுரித்துக் காட்டவேண்டிய காலம் வந்தபோது, இதுவரை காலமும் சிறிலங்கா இராணுவத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டக்களத்தில் முன்னின்ற திலீபன் அகிம்சைப் போரில் குதித்தான்.

சிங்களக் குடியேற் றங்களை நிறுத்துதல், தமிழ்க் கிராமங்கள், பள்ளளிக் கூடங்களில் நிறுவப்பட்டிருந்த இராணுவமுகாம்களை அகற்றுதல், சிறிலங்கா பொலிஸ் நிலையங்களை நிறுவுதலை நிறுத்துதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உண்ணா விரதத்தை திலீபன் ஆரம்பித்தான். தார்மீகமே உலகை உய்விக்கும் வேத மென்று உருப்போட்டுக் கொண்டிருந்த இந்தியா வுக்கெதிராக திலீபன் சாகும் வரை சாத்வீகப் போர் புரிந்தான்.

நல்லை மணல் வீதியில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



உண்ணாநோன்பு ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக திருநீறு அணிந்துவிடும் ஒரு தாய்

குவிகின்ற மக்கள் வெள்ளத்தின் நடுவே பன்னிரு நாட்களாக துளி நீரும் அருந்தாது சிறுகச் சிறுகச் சாவைத் தழுவிக் கொள்கின்ற போதும் அமைதிப்படை அமைதியாக இருந்தது.



உண்ணாநோன்பு இருக்கும் தியாகி திலீபனுடன் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

இந்தியாவின் சாத்வீக முகம் கிழிந்தது. அதன் உண்மையான விகார முகம் தெரியத் தொடங்கிய போது மக்கள் கொதித்தெழுந்தனர். தங்கள் பொய்முகம் தெரியத்தொடங்க இந்திய அமைதிப்படையும் உள்ளுக்குள் கொதிக்கத் தொடங்கியது. சர்வதேசங்களில் எல்லாம் இந்தியா பற்றிய போலி முகத்திரை கிழிந்து தொங்கியது. ஆத்திரமுற்ற இந்தியா தான் வந்த உண்மையான நோக்கத்தை நிறைவேற்றத் தொடங்கியது. முன்னரை விட மக்கள் கோரமாகத் தாக்கப்பட்டனர். அவலங்கள், அலைச்சல்கள். ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் ஒவ்வொரு இராணுவமுகாம். ஒரே நேரத்தில் உலகின் 4வது மிகப்பெரிய இராணுவத் துடனும் கிறிலங்கா இராணுவத்துடனும் போர். ஆனாலும் இரண்டு வருட கால இடைவெளிக்குள் இந்தியப் படைகள் வந்தபாதைகளால் திரும்பி ஓடத் தொடங்கினர். இது தமிழீழ மக்களின் உறுதிக்கும் விடுதலை நேசிப்புக்குமான எடுத்துக் காட்டு. இந்தியாவையே நம்பியிருந்த மக்களுக்கு இந்தியாவின் உண்மை நோக்கை அம்பலப்படுத்தி இந்தியாவை வெற்றி கொள்ள வைத்தது திலீபன் என்னும் மகத்தான போராளியின் அந்த அகிம்சை யாகம்தான்.

இன்றைக்கு தமிழீழத்தில் 'திலீபன்' என்னும் சொல் ஒரு விடுதலைப் போராளியின் பெயராக மட்டும் இல்லாமல் ஆக்கிரமிப்புக்கெதிரான போர்க்குணாம்சத்தின் குறியீடாக நிற்கிறது.

**கஜன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




என் உள்ளம் குமுறிக் கொண்டிருக்கின்றது.

இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது?

'மழலைகள் மனித சமுதாயத்தின் சிற்றுருக்கள் அல்லர்' என்ற உளவியற் பரிபாஷையிலா?

தமது அபிலாசைகளை யெல்லாம் இந்தப் பிஞ்சுகளில் ஏற்றி இவர்கள் எதனைச் சாதிக்க விரும்புகிறார்கள்? குழந்தைகளின் உலகமே வித்தியாசமானது என்பதனை இவர்கள் அறியமாட்டார்களா?

குழந்தைகளின் உலகத்தைப் பற்றியே தெரியாதவர்களுக்கு என் உள்ளக் குமுறல் எப்படி விளங்கப் போகிறது?

எத்தனை தரம் சொல்லியிருப்பேன், 'நீங்கள் நினைப்பது போல இதுவொன்றும் அவ்வளவு சுலபமான காரியமில்லை' என்று.

இவர்களுக்கெல்லாம் இதனைப் பற்றிய அக்கறையே இல்லை. இவர்களுக்கு வேண்டியதெல்லாம் கௌரவமும், அந்தஸ்தும் தான். இந்தப் பிரதேசத்திலேயே சிறந்த சங்கம் தங்களுடையது தான் என்று காட்டிவிட வேண்டும்; மாதிரிக் கிராம அபிவிருத்திச் சங்கம் என்ற முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

'இவர்களும் இவர்களின் சங்கமும் பட்ட பாடு' என்று அனைத்தையும் துறந்துவிட்டு என்றோ ஓடியிருக்க வேண்டும். இப்பொழுதும் கூட, எடுத்த காரியத்தை முடிக்க வேண்டுமே என்பதனால்தான் பல்லை இறுக்கிக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் இவர்களின் செய்கைகளை எல்லாம் பார்க்கும் போது, இந்தக் கணமே ஓடி விடலாமா என்றுதான் தோன்றுகிறது.

இந்த வேலையை விட்டுவிட வேண்டுமென்று இதுவரை எத்தனை தடவை எண்ணியிருக்கின்றேன் என்பதனை நினைத்துப் பார்க்கும் போது, என் இயலாமை குறித்து எனக்கே என்மீது வெறுப்பாகவும் வருகிறது.

இவ்வாறு எண்ணுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னைச் செயலில் இறங்க விடாது தடுத்து நிறுத்தி, மீண்டும் இந்தக் கட்டுக்குள் கொண்டுவந்து விட்டு விடுகின்ற என் பிள்ளைகளின் அன்பையும், என் கணவரின் அன்புக் கட்டளையையும் நினைத்துப் பார்க்கிறேன்.

என் பிள்ளைகளுக்காக என் மனம் அழுது அரற்றிக் கொண்டிருப்பது இவர்களுக்கு எப்படித் தெரியப்போகிறது?

'ரீச்சர், ரீச்சர்' என்று மழலையில் கூவி, என் பின்னால் இழுபறிப்பட்டுத் திரிந்த பிள்ளைகளை எல்லாம் 'கொற கொற' என்று கைப் பிடியாக இழுத்துச் சென்று அவரவர் இல்லங்களில் அடைத்துவிட்ட, 'மாதர் அபிவிருத்திச் சங்கத் தொண்டர்களின்' செய்கை கண்முன்னால் ஊசலாடுகிறது.

பாலர்களுக்குள்ளும் போட்டியா?

அவர்களுக்கு இல்லம் வேறா?

பாலர்களுக்கு வேண்டியதெல்லாம் அவரவர் செய்கைகள்தாம். தங்கள் செயல்களை தம் இஷ்டப்படி தாமே செய்ய வேண்டும். அந்தச் செயல்களை ரீச்சர் பார்த்துப் பாராட்டிவிட்டால்

த. கலாமணி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போதும், அவ்வளவுதான்; குதூகலித்துக் கொண்டு பூச்சிகளாய்ப் பறப்பார்கள்.

இவற்றையெல்லாம் ஆற அமர இருந்து சிந்திக்க இவர்களால் முடியுமா?

இவர்களுக்கு, இந்தப் போட்டிகளை, விதிமுறை தவறாது நடாத்தி முடித்துவிட வேண்டும் என்ற தவிப்பு.

ஒலிம்பிக் போட்டியொன்றை நடாத்துகின்ற ஏற்பாடுகளுடனும், கவனத்துடனும் இப்போட்டியை நடத்தி முடித்து, அந்த நிர்வகிப்பைக் கண்டு பிரதம விருந்தினர்களாயும், சிறப்பு விருந்தினர்களாயும் வந்திருப்பவர்கள் பாராட்ட வேண்டுமே என்ற அங்கலாய்ப்புடன், இவர்கள் எல்லோரும் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்குத்தான் திண்டாட்டம். இதுநாள்வரை அவர்கள் காணாத புது முகங்களைக் கண்டு மிரள்வதும், அழுவதுமாக இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் பிள்ளைகளுடன் ஆரம்பிப்பாளர்கள் திண்டாடிய வேளையிலும், என் சொல்லைக் கேட்ட பின்தான், பிள்ளைகள் எல்லோரும் வரிசையாகவும், ஒழுங்காகவும் வந்து நின்றார்கள்.

அதுவே எனக்குக் கிடைத்த ஒரு வெற்றிதான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல என் சொல்லைக் கேட்டு பிள்ளைகள் எல்லோரும் ஒத்திசைந்தபோது, இங்கு நின்றவர்கள் எல்லோரும் மலைத்துத்தான் போய்விட்டார்கள்.

அதற்குப் பின்பாவது, இவர்கள் என்னைச் சுயமாக இயங்க விட்டிருக்கலாம். ஆனால், இவர்கள் அதைத் தங்களுக்கு ஏற்படக்கூடிய பெரிய தோல்வியாகக் கருதியிருக்க வேண்டும். அதனால்தான் என்னவென்னவோ சொல்லி என்னைப் பின் தள்ளப் பார்த்தார்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


"ரீச்சர், பெற்றோர் எங்களைக் குறை சொல்லு வினம். நீங்கள் ஒன்றும் விளையாட்டுத் தொடங்கிற இடத்துக்கோ, முடிகிற இடத் துக்கோ போகவேண்டாம். அடுத்தடுத்த விளையாட் டுக்களுக்கு பிள்ளையளைத் தயார்படுத்தி அனுப்பினால் போதும்...."

தலைவியின் நாசூக்கான வார்த்தைகள் நாராசமாய் என் காதுகளில் இன்னமும் ஒலித் துக் கொண்டிருக்கின்றன.

இவர்கள்தான் போகட் டும், இந்தப் பெற்றோர்களுமா இப்படி மாறிவிட்டார்கள்; இந்தப் பெற்றோர்களுக்குமா என்னை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த விளை யாட்டு விழாவுக்கென பிள்ளை களுடன் நான் எவ்வளவு தூரம் பாடுபட்டு வந்தேன் என்பதையும்தான் ஒவ்வொரு நாளும் கண்டுவந்தார்களே.

இந்த விளையாட்டு விழாவின் நோக்கமே மாறி விடக்கூடாது என்பதற்காக இப்பெற்றோர்களை அழைத்து எவ்வளவு தூரம் இந்த விழா பற்றி விளக்கியிருந்தேன். அப்படியிருந்தும் எப்படி இன்று இவர்களால் தங்களுக் குள் போட்டிபோட முடிகிறது. தங்கள் தங்கள் பிள்ளைகளுக் காகவும், அவரவர் இல்லங்க ளுக்காகவும் இத்தனை கூப் பாடு போடுகின்ற இப்பெற்றோ ரை எண்ணும்போது எனக்கு மலைப்பாக இருக்கிறது.

பெற்றோரைக் குறை சொல்லியும் பயனில்லைத்தான். அவர்களை அழைத்து, விசேட கூட்டமும் நடத்தி, இந்த விளையாட்டு விழாவை பெரிய போட்டியாக நடத்துவதற்கு அப்பெற்றோரின் ஒத்துழைப் பையும் கோரியிருந்த மாதர் சங்க நிர்வாகம்தான் அவர்களை இவ்வளவு தூரம் மாற்றியிருக் கின்றது. "நீங்கள் ஒருவ ரும் குறை சொல்லாத அளவுக்கு இந்த விளை யாட்டுப் போட்டியை நடாத்தி முடிக்க வேணும். அதனாலைதான் நாங்கள் இந்த ஊரிலை இருந்து ஒருத்தரையும் எடுக்காமல், பிற ஊர்களிலையிருந்து மத்தியஸ்தத்துக்கு ஆட்களை எடுத்திருக் கிறம்." என்று தலைவி சொன்னபோது, அதன் உள் நோக்கத்தை அறியாதவர்களாக பெற்றோரும் தலை யாட்டத்தான் செய் தார்கள்.

பெற்றோர்களுக்கு எங்கே தெரியப்போகிறது, இவை எல்லாமே தமது சங்கத்தை பிரபல்யப்ப டுத்த இவர்கள் எடுக்கின்ற முயற்சிதான் என்று.

இவர்களுக்கெல்லாம் கட்டுப்பட வேண்டும் என்று எனக்கென்ன தலையெழுத்தா? அதனால்தான் இந்தப் போட்டி முடிந்தகை யோடையே என் வேலை யையும் விட்டு விடுவதாக எண்ணியிருக்கிறேன்.

இந்த முறை என் கணவரும் என் முடிவை ஆதரித்துத்தான் ஆக வேண்டும். இன்றைய நிகழ்வுகள் எல்லாம்தான் நிதர்சனமாகத் தெரிகின் றனவே.

இந்த விழாவின் ஆயத்தங்களுக்கான விசேட கூட்டத்தில், 'இந்த விழாவைப் போட்டி யாக்காதீர்கள்' என்ற என்

## திசையில்லா பயணங்கள்

அந்தி படர்ந்து
சாகாத பகல் நீளும்.

இருள் கழுவி
சலவை செய்யும்
மின்னொளி நனைத்து
விறைத்த கட்டிடத் தோள்களில்
விண் சாய்ந்து தூங்குதலும்

அவசரமாய், தெருக்களை முத்தமிட்டு
விரைந்து நழுவும்
வாகனச் சில்லுகளும்

பறவைகள் மிருகங்கள்
இருள், நிலவு.... என நீளும்
இயற்கையின் முகிழ்ப்புக்களை
காட்சிக் கூண்டிலேற்றி
பார்வைக்கு வைத்தலுமாய்
நெரிசலில் பிதுங்கும் நகரங்கள்.

உயிர்த்துடிப்புகளை விழுங்கி
ஏப்பப் புகை விடுகின்ற
இயந்திரங்களின் இரைச்சலில்
சுற்றுப்புறமும் சக மனிதனும்
தோழமைக்கு அப்பால்.

இரவல் தெருவெல்லாம்
முகமில்லா மனிதர்களாய்
திருவிழாக் கூட்டத்தில் தவறிய
குழந்தை உணர்ச்சித் தவிப்புடன்
"நானும் மனிதன்; நாமும் மனிதர்"
நரம்பு நாளங்கள் புடைக்க
கூவி என்ன பயன்
சந்தை நெரிசலில்
எனது குரல்
எனக்கே கேட்காதபோது.

தாழிக்குத் தப்பி
தீயுள் விழுதலாய் இது
தெரிந்து விழுந்த பொறிதான்.

வேர்நிலம் பிரிந்த விதைகள்
காற்றின் திசையெங்கும்
முளைநிலம் தேடும்.
எல்லாத் தரைகளிலும்
உயிர்ப்புல் தின்னும் மேய்ச்சல் மாடுகள்.

நீர்க்கானல் கரைகளில்
நீள்கின்ற பசுமையில்
செல்லும் திசை
சேரும் இலக்கு எதுவுமேயின்றி
கடிவாளம் இல்லாக் குதிரை
ஓடி ஓடி முச்சிரைக்கும்.

கஜன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கருத்தை, மாதர் அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் ஏற்றுக்கொள்ளாத போதே எனக்குத் தெரிந்துவிட்டது, இவர்களுடன் ஒத்துப்போக முடியாதென்று. அன்றைய கூட்டம் முடிந்து வீட்டுக்குச் சென்று, அன்றைய கூட்ட நிகழ்வுகளையெல்லாம் என் கணவருக்கு எடுத்துக் கூறி, இந்த வேலையை விட்டுவிடப் போவதாக என் கணவரிடம் முன் அறிவித்தல் கொடுத்ததும் ஒரு வழிக்கு நல்லதுதான்.

இன்றைய விழாவின் போக்கை அவரும் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ளாமலா இருக்கப் போகிறார்? என் கணவர் மீது கூட எனக்கு கோபம் கோபமாக வருகிறது. இவராவது எனக்கு அனுசரணையாக நாலு வார்த்தை சொல்லலாமே.

அதுதான் இல்லை. இங்கு நடக்கின்ற அநியாயத்தை எல்லாம் பார்த்தீர்களா என்று இரக்கத்துடன் அவரை நான் பார்க்கின்ற ஒவ்வொரு வேளையிலும், என்னைப் பரிவுடனாவது பார்க்க வேண்டுமே. மாறாக, ஒவ்வொரு வேளையிலும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொள்ள வேண்டுமா?

சிரிப்பு, என்ன சிரிப்பு? இந்த நேரத்தில் என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கிறது? என் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் கண்டும் என் முக வாட்டத்தைக் கண்டும் இவரால் எப்படிச் சிரிக்க முடிகிறது? குறுந்தாடியையும் வருடிக்கொண்டு அது என்ன சிரிப்பு?

இந்த நேரத்தில் மட்டுமா?

எனக்கும் இவருக்கும் உள்ள விருப்பத்திற்கு குறுக்காக நின்ற என் பெற்றோரையும் உதறித் தள்ளிவிட்டு, இவரிடம் ஓடிவந்து, இவரின் குடும்ப நிலையைக் கண்டு 'அவசரப்பட்டு விட்டோமே..... சிறிது காலம் பொறுத்திருக்கலாமே' என்று நான் செய்த தவறை உணர்ந்த வேளை......

திருமணம் முடிக்காத இவரின் சகோதரிகளுக்கு மத்தியில் கும்மாளம் அடிக்க வந்துவிட்டா ராசாத்தி என்று காதுபடவே அயலவர்கள் குத்தலாகக் கதைத்த வேளை......

குடும்ப நிலைமையை அனுசரித்து எமக்குள்ளேயே கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டு, நான்கு வருஷ தாம்பத்திய வாழ்வையும் நெருப்பாற்றைக் கடப்பது போல வாழ்ந்து வருகையில் 'குழந்தை இல்லாத மலடியாக்கும்' என்று ஊரவர் பழி சுமத்திய வேளை....

இந்த ஊரின் மாதர் அபிவிருத்திச் சங்கம் நடாத்துகின்ற பாலர் பாடசாலையின் ஆசிரியையாகி, இவரின் செலவிலேயே பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சியையும் முடித்து, இப்பாடசாலைப் பிள்ளைகளுடன் அன்னையாகவும், தந்தையாகவும் தோழியாகவும் ஆசானாகவும், சேவகனாகவும் என்னைப் பிணைத்துக் கொண்ட போதும் 'நிருவாகம்' என்ற கவசத்தைப் பூண்டு, மாதர் அபிவிருத்திச் சங்கம் என்னை அதிகாரம் செய்கின்ற வேளை....

இப்படி எத்தனை, எத்தனை.

இந்த ஒவ்வொரு வேளையிலும் நான் வருந்தியதை உணர்ந்த போதும் என்னைப் பார்த்து இவரால் எப்படிச் சிரிக்க முடிந்தது?

சிரிப்பு என்பது, பரிவு என்று இவரின் அகராதியில் அர்த்தமாக இருக்கலாம். எந்த ஒன்றுக்கும் கலங்காத உறுதி இவரிடம் இருக்கலாம். ஆனால் நான்.....

எங்களுக்கென்றொரு குழந்தையைப் பெற்றுக் கொண்டாலென்ன என்று நெஞ்சில் ஆசை முகிழ்க்கின்ற வேளை, 'இந்தப் பாலர் பாடசாலைப் பிள்ளைகள் எல்லாமே உன் பிள்ளைகள் தானே' என்று ஆதரவாகக் கூறி சகோதரிகளின் திருமணம் முடிகின்றவரை பொறுத்துக் கொள்ளச் சொல்கின்ற இவரின் சாமர்த்தியம்......

பாலர்களுக்கு பாடம் போதிப்பதனால் பிள்ளைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம் என்று சொல்லி, 'குழந்தை உளவியல் பற்றிய போதனையையும் செய்து, எந்தெந்த நேரத்தில் எப்படி பிள்ளைகளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் குழந்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவது போல விளக்கமாகச் சொல்லித் தருகின்ற லாவகம்....

இலட்சிய வாழ்விலே அடியெடுத்து வைக்கின்றவர்களுக்கு துன்பம் ஒரு பொருட்டல்ல என்று சித்தாந்தம் பேசுகின்ற தெளிவு.....

'விரலுக்குத் தக்க வீக்கம்' என்பது போல தன் வல்லமைக்குப் பொருத்தமான இடங்களில் பேசி முடித்துத் தம் சகோதரிகள் ஒவ்வொ

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ருத்தருக்கும் மணம் முடித்துக் கொடுத்து வருகின்ற உலகானுபவம்......

இவையெல்லாமே இவர்மீது என்னைப் பிரமை கொள்ளத்தான் செய்கின்றன. இவருக்காக..... இவரின் ஒரு சொல்லுக்காக.... இவர் என்மீது காட்டுகின்ற பரிவுக்காக, எல்லாவற்றையும் நான் பொறுத்துக் கொள்ளலாம் தான். ஆனால் இந்த ஒரு விடயத்தில் மட்டும் இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நான் என் முடிவை இன்று இவரிடம் சொல்லத்தான் போகின்றேன்.

# வீரச்சாவடைந்தோர் நினைவாலயம்

இரத்தத்தில் தோய்ந்த புதிய ஒரு புரட்சிகர வரலாறு எமது மண்ணில் எழுதப்படுகின்றது.

எமது நிலத்தின், எமது இனத்தின் விடுதலைக்காக நாம் கொடுக்கின்ற விலை மிகப் பெரியது; ஒப்பற்றது.

தியாகங்களால், அர்ப்பணிப்புக்களால் உரமாக்கப்பட்டு, ஆட்டங்காண முடியாத உறுதியுடன் எமது போராட்டம் கட்டிவளர்க்கப்படுகின்றது.

தமிழீழத் தேசத்தின் ஆயிரக்கணக்கான புதல்வர்கள் எங்கள் தேசத்தின் நிர்மாணிப்பிற்காக தம்மையே அடிக்கற்களாக்கிப் புதைந்து கிடக்கின்றனர். வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணித்து மக்களுக்காகவே சாவையும் அணைத்துக் கொள்வதில் அவர்கள் மகிழ்ச்சி யடைந்தார்கள், பெருமைப் பட்டார்கள்.

ஆகாய, கடல், வெளி இராணுவ நடவடிக்கை ஆனையிறவுப் பெருங்களத்தில் நடந்து முடிந்த வரலாற்றுச் சமர். உலகம் மூக்கில் விரலை வைத்துத் தமிழீழத்தை வியந்து பார்க்க வைத்த களம்.

“இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் உண்டு” என முதல் தடவையாக உலகைப் பேச வைத்த களம். தமிழீழத்தின் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டுள்ள பெரு முள்ளைப் பிடுங்கி எறிய புலிகள் இயக்கம் பெருமுயற்சி எடுத்த களம்.


சிங்கள தேசத்தின் முப்படைகளினதும் திரண்ட படைகளின் ஒருமித்த தாக்குதலை எதிர்கொண்டு நின்று, மரபுவழிச் சமர் புரிந்த முதற்பெரும் களம். ஈராண்டுகளுக்கு முன்பு இதே நாட்களில் அந்த யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

அந்த வரலாற்றுச் சமரின்போது 599 புலிவீரர்களும், புலிகளுக்கு தோள் கொடுத்து நின்ற 3 துணைப்படை வீரர்களும் தாயக விடுதலைக்காகத் தமது உயிர்களை ஈந்தார்கள்.

அந்த உவர் நிலத்தில்..... அந்தக் கடற்கரை மணற்பரப்பில்..... வெட்ட வெளிகளில் கிடக்கின்ற பற்றைகளுள்..... அந்த நெடிய பனைகளுக்கடியில்..... தங்கள் உடல்களைச் சரித்த அந்த விடுதலை வீரர்களின் நினைவு நாள் இன்றாகும்.

அந்த உன்னதமான வர்களின் ஞாபகார்த்தமாக. கொடிகாமம் கண்டி வீதியில் உருவாக்கப்பட்டதுதான் இந்த நினைவாலயம்.

எங்கள் அன்புக்கினிய மக்களே! எங்கள் குழந்தைகளாக, எங்கள் உடன்பிறப்புக்களாக, எங்களின் இனிய நண்பர்களாக வாழ்ந்து, எங்களின் விடுதலைக்கென்றே சாவையும் ஏற்ற அந்த வீரமறவர்களின் வாழ்வு என்றும் எம் உள்ளங்களில் நிலைத்து நிற்கட்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஏன், இவரும்தான் இன்றைய நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டு வருகின்றாரே.

'ரீச்சர், ஆரம்பிக்கின்ற இடத்துக்கோ முடிவடைகின்ற இடத்துக்கோ போகவேண்டாம்.' என்று தலைவி சொல்வது ஒருபுறம் இருக்கட்டும்; ஆனால் முறுக்கு மீசைகளுடன் கூடிய இரு கிங்கரர்கள்தான் ஆரம்பிப்பாளராக அமைய வேண்டுமா?

அதுதான் போகட்டும். அழகுராணிப் போட்டிக்கெனத் தம்மை அலங்கரித்துக் கொண்டவர்கள் போல வந்திருந்து, அலுங்காமல் நலுங்காமல் நளினம் காட்டுகின்ற இந்த நவநாகரிகப் பெண்ககள்தான் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமா?

மத்தியஸ்தம் சரியில்லை என்று கொக்கரித்து, குழந்தைகளின் விளையாட்டு என்பதையும் மறந்து, விளையாட்டு விதிமுறைகளில் நுணுக்கம் காட்டி, நடாத்திமுடிந்த விளையாட்டுக்களையும் திரும்ப நடாத்த வேண்டும் என்று குழப்பம் விளைவிக்கின்ற இந்தப் பெற்றோர்களைக் காணக் காண எனக்கு எரிச்சலாக வருகிறது.

பிள்ளைகளுக்கு போட்டி முக்கியமல்ல; அவர்களுடைய பங்குபற்றல்தான் முக்கியம் என்று எடுத்துச் சொல்லி, பெற்றோர்கள் எல்லோரையும் முன் எச்சரிக்கை செய்து, இந்தப் பாலர் விளையாட்டு விழாவை ஒரு போட்டியாக மாற்ற விடாமல் நான் எடுத்துக்கொண்ட முன் எத்தனங்களையும் மீறி, இந்தப் பெற்றோர்கள் இப்படிக் குழப்பம் விளைவிக்கின்றார்களே என்றால், இவற்றுக்கு எல்லாம் சூத்திரதாரிகள் இந்த நிருவாகிகள் தான்.....

இவர்களுக்கு அழகுணர்ச்சியே இல்லையா?

விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் அழகாகவும், ஒழுங்காகவும் இருக்க எண்ணி, பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தாராபோல் குறுநடை பயில விட்டு, முயல்போல் குதித்துத் குதித்து ஓடவிட்டு, பிள்ளைகளின் செய்கைகளிலெல்லாம் அழகு கூட்டி, கனகச்சிதமாகப் பயிற்சி அளித்து, பிள்ளைகளைத் தயார் படுத்தியிருந்தேனே. இந்த அழகையெல்லாம் எப்படி இவர்களால் சிதைக்க முடிந்தது.....?

இன்று தவளைப் பாய்ச்சலா வைத்தாரகள் அல்லது தாராநடை பயிலவா விட்டார்கள். அதுதான் இல்லையே. பெற்றோர்களும் பார்வையாளர்களுமாகச் சேர்ந்து, ஒவ்வொரு விளையாட்டையும் ஓட்டப் போட்டியாகத்தானே முடித்தார்கள்.

தாராநடை பயின்ற பிள்ளைகளில் இருவர் ஒரே நேருக்கு மெது மெதுவாக சீருடையில் அழகு நடை நடந்துவந்த போது, முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் முடிவிடத்தை அடைந்து விட்டார்கள் தானேயென்று விளையாட்டை முடித்துக் கொண்டு, அந்த மழலைகள் இருவரையும் நடைபயின்று முடிக்க விடாது இடையிலேயே தூக்கி அப்புறப்படுத்திய மாதர் சங்கத் தொண்டர்கள் கூட 'நிருவாகத்தின்' பணிப்பின் பேரில்தானே இயங்கினார்கள்.

## அன்றும் இன்றும்

"காட்டுக்கு வாறியா,
வேட்டையாட ?"
"ஓ....! ஓ...."
"கள்ளன் வந்தா
பயப்படக்கூடாது என்ன ?"
"ஓ....! ஓ..."
கேட்ட பிள்ளை மற்றக்
குழந்தையின், கண்ணுக்குள்
ஊதிவிடுகிறது! ; சரி
சொன்ன பிள்ளை உடன்
கண்ணை மூடித்திறக்கிறது.
"பார்த்திரோ, பயந்திட்டீர்!" அது
தன் வெற்றியைக்
கைகொட்டிக் காட்டுகிறது!
இது பழைய விளையாட்டு!

### இன்று

இரண்டு குழந்தைகள்
விளையாடுகின்றன. ஒருவன்
ஓடிப்போய் உள்ளே குசினியில்
எரிந்து கொண்டிருந்த சிறு
விறகைக் கொண்டு
வருகிறான்.
அதனை ஒரு கல்லின் மேல்
வைக்கிறான். மற்றவனின்
கையில் கூரையின் உடைந்த
சில "சீற்" துண்டுகள்
தெரிகின்றன. அவற்றை அந்த
விறகிருந்த கல்லின்மேல்
"டோம்" என்ற சத்தத்துடன்
அடிக்கின்றனர். பலத்த சத்தம்.
விறகு புகை விளக்குகிறது.
சுற்றிலும் ஓடுகள்
சிதறிக்கிடக்கின்றன!
"என்ன பிள்ளைகள் இது"
எனத் தாத்தா அசைந்து வந்து
கேட்கிறார்.
"ஷெல் விளையாட்டு!"
இரு பிள்ளைகளும்
கைகொட்டிக் குதிக்கின்றன!
தாத்தா வியப்புடன் புன்னகை
பூக்கிறார்!

(உண்மை நிகழ்விலிருந்து)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இவை எல்லாம்தான் போகட்டும். பலூன் உடைக்கும் விளையாட்டுக்கு என்று மட்டும் என் சொந்தச் செலவில் எத்தனை பலூன்கள் வாங்கியிருப்பேன். இரண்டு பெட்டிகள் நிறைய பலூன் களை எடுத்துச் சென்று, பலூன் ஊதி உடைக்கப் பயிற்சி கொடுத்து, உடைந்த பின்பும் வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஒவ்வொரு பலூன் கொடுத்து, ஒவ்வொரு பிள்ளையையும் கொண்டு பலூனை உடைப்பித்து அவர்களின் திறமைக்காக அவர்களையே கைகொட்டி மகிழச் செய்து, விளையாட்டு விழாவிலும் எல்லாப் பிள்ளைகளும் பலூனை ஊதி உடைக்க வேண்டும் என்று சொல்லியிருந்தேனே. இவற்றை எல்லாம் பெற்றோர்களும்தான் கண்டுவந்தார்களே. விளை யாட்டுப் பழக்கத்தின் போதும், போதனை வேளைகளிலும் இந்த நிருவாகிகள் வந்து பார்த்திருந்தாலல்லவா அவர்க ளுக்கு இவை எல்லாம் விளங்கும்?

முதல் மூன்று பிள்ளைகள் பலூனை ஊதி உடைத்ததுமே, "நேரம் போயிட்டுது; மற்றப் பிள்ளையளை உடைக்காமலே பலூனைக் கொண்டு போகச் சொல்லுங்கோ." என்று சொல்லி, தொண்டர்களை அனுப்பி பலூன்களைப் பறித்துக் காற்றுப் போகச் செய்து, மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி பிள்ளைகள் மீது பரிவைக் காட்டியதைக் கண்டு என் உள்ளம் உடைந்தது இவர்களுக்கு எப்படித் தெரியும்?

குழந்தை சுதாவை நினைத்துக் கொள்கின்ற போது எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வருகின்றது.

பலயீனமான குழந்தை என்று மற்றையோர் கணிப்பிலுள்ள அந்தக் குழந்தைக்குக் கூட நம்பிக்கையூட்டி, கூடவே சேர்ந்து பலூன் ஊதி, அந்தக் குழந்தையைக் கொண்டே பலூனை ஊதி உடைக்கச் செய்து, அந்தக் குழந்தையிடம் பொங்கும் மகிழ்ச்சியில் நான் அனுபவித்த சந்தோசம் நினைவுக்கு வந்து என்னை என்னவோ செய்கிறது. காற்றுப் பொறித்த பலூனைப் பெற்றுக் கொண்டு, சுதா என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே. அப்பப்பா.....

நேரம் போய்விட்டதே என்று இத்தனையும் செய்து முடித்தவர்கள், பேச்சுப் பேசி ஏன் இப்படி நீட்டி முழக்க வேண்டும்.

பிள்ளைகளிற் பலருக்கு நித்திரை வந்திருக்க வேண்டும். கண்களில் சோர்வு தெரிகிறது. அது இவர்களுக்குத் தெரிந் தால்தானே. முதலில் பரிச ளிப்பை முடித்துவிட்டுப் பேச லாமே என்ற என் ஆலோச னையைக் கேட்டால்தானே. மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவியோடு விட்டாற் போதாதா? இந்த ஊரின் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களையும் அல்லவா மேடைக்கு அழைத்திருக் கிறார்கள். அவர்களுக்கு 'நாங்கள் ஒன்றும் சளைத்தவர் களில்லை' என்று தம் பெருமைகளையெல்லாம் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றரை மணித்தியா லமாகப் பேசிக்கொண்டிருந்த பேச்சுக்கள் எல்லாம் ஒருவாறு ஓய்ந்துவிட்டன. பிள்ளைகள் ஒவ்வொருவரும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும்போது அவர்களின் மலர்ச்சியைக் காண நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

பிள்ளைகள் ஒருவருக் குமே ஏமாற்றமில்லாமல் முதலில் ஒவ்வொருவருக்கும் பெறுமதியான ஒரு பரிசைக் கொடுத்துவிட்டுப் பின்பு வெற்றியெடுத்தவர்களுக்கான பரிசுகளைக் கொடுக்கலாம் என்ற என் ஆலோசனையை யாவது முன்னைய கூட்டத்தில் ஏற்றுக் கொண்டார்களே என்ற திருப்தியோடு, பிள்ளைகள் ஒவ்வொருவர் முகத்தையும் நன்கு பார்க்கக் கூடிய இடத்தில் நின்று கொள்கிறேன்.

என்ன இது? செயலாளர் ஏன் இப்படி ஏறுக்கு மாறாக நடந்து கொள்ள வேண்டும்.

வெற்றியெடுத்தவர்களின் பெயர்களை மட்டுமே செயலாளர் வாசித்துக் கொண் டிருக்க, என்னால் இனியும் பொறுக்க முடியாதவளாய், அவ்விடத்திற்கு நெருங்கி, முதலில் பிள்ளைகள் எல்லோ ருக்கும் பரிசுகளை வழங்குமாறு சொல்கிறேன்.

'நேரம் போயிட்டுது. பரிசு கிடையாத பிள்ளைய ளுக்கு நாளைக்கு நேசரியிலை வைச்சுக் கொடுப்பம்.' என்று தலைவி சொல்வதைக் கேட்டு என் நெஞ்சம் வெடித்துவிடும் போல இருக்கிறது.

வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு கொடுத்து முடிவடையும் தறுவாயில் "இனியாவது மற்றப் பிள்ளையளுக்கும் கொடுக் கலாம்தானே" என்று கெஞ் சலாகவே தலைவியிடம் கேட் கின்றேன்.

'இல்லை, எங்கட பிரதம விருந்தினருக்கு நேரம் போயிட்டுது' என்று தலைவி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொல்லிக் கொண்டிருக்கையில் பிரதம விருந்தினரே குறுக்கிடுகின்றார்.

"இல்லை நான் இருக்கிறேன். மற்றப் பிள்ளையளையும் கூப்பி டுங்கோ."

என் உள்ளம் குதூக லிக்கின்றது. ஒவ்வொரு பிள்ளைகளின் பெயரையும் கூப்பிடும் போது காத்தி ருந்தவர்கள் போல, துள்ளல் நடையுடன் வந்து பவ்விய மாகத் தலைகுனிந்து வணங்கிப் பரிசை பெற்றுக் கொள்ளும் காட்சி கண்களை நிறைக்கிறது. இறுதியாக சுதாவின் பெயர் வாசிக்கப் படுகிறது.

'சுதா.... சுதா'

சுதாவைக் காணவில்லை.

அப்போதுதான் சுதா வைக் காணவில்லை என்று அறிந்துகொண்ட அவளின் தாயும், சுதாவின் பெயரைச் சொல்லி உரத்துக் கூப்பிடு கின்றாள். சுதாவின் பெயரை விளித்துப் பெயர்கள் ஒரே நேரத்தில் ஒலிக்கின்றன.

எனக்குப் பரபரப்பாக இருக்கின்றது. 'சுதா, சுதா' என்று கூவிக்கொண்டே ஓடுகிறேன். என் பின்னாலேயே என் கணவரும் ஓடிவருவது தெரிகிறது.

நன்கு இருட்டிவிட்ட மையால் ஒன்றும் தெரிய வில்லை. விளையாட்டுத் திடலில் இருந்து சற்றுத் தூரத்திலிருந்த பாலர் பாடசாலைக் கட்டிடத்தை நோக்கி இருவரும் ஓடுகிறோம். கட்டிடத்தின் முன்னால் உள்ள ஆலமரத்தின் கீழுள்ள வெளியில் யாரோ நிற்பது போலத் தெரிகிறது.

அருகில் நெருங்குகிறேன். என் கணவர் கூடவே வைத்திருந்த 'டோர்ச் லைற்' வெளிச்சத்தை எங்கள் மீது பாய்ச்சுகிறார். என் மனம் அதிர்ந்தது.

வழமையாக ஆலமரத்தின் கீழே நிழல் விழும் சிறு நிலப்பரப்பில் கோடுகீறி விளையாட்டுப் பழக்கும் அதே இடத்தில் சுதா!

கையில் பலூன் ஒன்றை வைத்து ஊதிக் கொண்டு மூச்சு இளைக்க இளைக்க எடுக்கும் முயற்சியைக் கண்டு என் இதயமே வெடித்துவிடும் போல் இருக்கிறது.

ஓடிச்சென்று சுதாவைத் தூக்க முயற்சிக்கிறேன். 'வேண்டாம்' என என்னைத் தடுத்து நிறுத்துகிறார் என் கணவர்.

'சுதா இன்னும் ஊது' என்று இருவருமே உற்சாகமூட்டுகிறோம்.

பலூன் பெரிதாகிப் பெரிதாகி....

'படார்!'

சுதாவைத் தூக்கிக் கொண்டே, பொத்துக்கொண்டு வரும் அழுகையை அடக்க மாட்டாதவளாய் என் கணவரின் நெஞ்சிலே சாய்கிறேன்.

என் முகத்தை நிமிர்த்தி, என் கண்ணீரைத் துடைத்துவிடும் அவரின் முகத்தைப் பார்க்கிறேன். இப்போது அதில் சிரிப்பு இல்லை. என் பொறுப்பை உணர்த்தும் அதன் அர்த்தம் புரிகிறது.

---



"விடுதலைப் புலிகளின் இராணுவ அணி, சிறிலங்கா இராணுவ அணியைப் போல, அரசியல் அரங்கில் நிலைபேறு அடைந்துவிட்டது. தமக்கென தனித்தனிப் படைகளைக் கொண்ட இரு நாடுகள் தான் இப்போது இலங்கைத் தீவில் உள்ளன. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மிகச் சாதாரணமான இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதே அடிப்படையாக இருக்கும்.

'ராவய' பத்திரிகையில் அதிரியன் விஜயமான் என்ற வரலாற்றுத்துறைப் பட்டதாரி.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 1000 குழந்தைகளைத் தத்தெடுக்கும் திட்டம்

*அன்பார்ந்த தமிழீழ மக்களே!*

தமிழீழத்தில் தொடர்கின்ற யுத்தத்தில் சிங்கள இனவாத அரசு தமிழ் மக்கள் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதனால் வீட்டுக்கு வீடு கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தையை இழந்த பெற்றோர் என்று எங்குமே அவலங்கள்.

இன்றைய நிலையில் பொருளாதாரச் சூழ்நிலைகளில் பாதிப்புக்குள்ளானவர்கள் மீது அடுத்தவர் அனுதாபப்பட முடியுமேயல்லாமல், அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. உதாரணமாக, அண்ணன் இறக்க, அண்ணனின் குழந்தைகளைப் பராமரிக்க தம்பி விரும்பினாலும், அவரது பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை.

இந்நிலையில், வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது உடன்பிறப்புக்களின் உறுதியான ஆதரவை எதிர்பார்த்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் "1000 குழந்தைகளைத் தத்தெடுக்கும் திட்டம்" என்ற பாரிய திட்டத்தை உருவாக்கி, பெற்றோரை இழந்த குழந்தைகளைப் பொறுப்பேற்று பராமரிப்பு நிலையம் ஊடாக அக்குழந்தைகளின் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மனிதாபிமானமுள்ள எம் உடன் பிறப்புக்களே! வாருங்கள் எமது எதிர்கால சந்ததியை பாதுகாப்போம். நல்ல மனம் கொண்டவர்கள் இத்திட்டத்தில் இணைந்து ஒரு குழந்தையின் பராமரிப்புச் செலவை ஏற்று, தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பூரண விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.

T.R.O.
P.O.BOX - 4254
KNOX CITY
VICTORIA = 3152
AUSTRALIA
TEL: 61 3 800 3591

T.R.O.
TAL Str -15
6020 EMMEN BRUCKE
SWITZERLAND.
TEL: 41 557469

T.R.O.
ZOUAVENLAAN - 99
4731 EP OUDENBOSCH
THE NETHERLANDS.
TEL: 31 165212832

T.R.O.
GRUNDTUIGSVEJ 28ST. TV
7400 HERNING
DENMARK.
TEL: 45 97223647

T.R.O.
2183 A LAWRENCE AVENUE
SCARBOROUGH - ONTARIO
M1 P2 P5
CANADA.
TEL: 1 416 4615991

T.R.O.
55 BOND WAY
LONDON SW 8 ISJ
ENGLAND
TEL: 81 5211313

T.R.O.
P.O.BOX 4742
SOFIEN BERG
0506 OSLO
NORWAY.
TEL: 47 22 646592

T.R.O.
GLOMMINGE GRAND - 29
16362 SPANGA
SWEDEN.
TEL: 46 8 7612943

T.R.O.
VIA MARIANO STABILE - 34
90139 PALERMO
ITALY.
TEL: 91 6113179

T.R.O.
LETTENSBERG - 47
26897 ESTERWEGEN
GERMANY.
TEL: 05955 1436

T.R.O.
188, RUE ORDENER,
75018 PARIS
FRANCE.
TEL: 33 42632487

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தன்னிறைவுடன் தலைநிமிர முழுநிலமும் பயிரிடுவோம்



மூன்றாவது தசாப்தத்தை நோக்கி தமிழீழ விடுதலைப் போராட்டம் நகர்ந்து கொண்டிருக்கும் காலகட்டமிது. தமிழீழ மக்களாகிய நாம் எமது தாயகத்தை வென்றெடுப்பதற்கான இந்தப் போராட்டத்தின்போது நாம் அனைவருமே நடந்துவந்த பாதையினை இன்றைய இந்த நிலையில் திரும்பிப் பார்ப்பது அவசியமானதும் விவேகமானதுமாகும். உலகமே வியக்கும் வண்ணம் தமிழீழ விடுதலைப் போராட்டமானது வளர்ச்சி கண்டுவிட்டது. சிறிலங்கா அரசானது, தனது தேசிய வருமானத்தில் அதிகமான பங்கினை இராணுவத்திற்கென ஒதுக்கி, ஆயுத சந்தைகளில் கொள்வனவு செய்யப்படும் படைக் கலங்களைக் கண்ணை மூடிக் கொண்டு தமிழீழப் பகுதிகளிற் பாவித்தும், இராணுவ ரீதியில் எமது விடுதலைப் போராட்டத்தை வெற்றிகொள்ள முடியாத நிலையில் பொருளாதார ரீதியில் எம்மை, எமது போராட்டத்தை அடிபணிய வைப்பதற்கு முனைந்துள்ளது. ஆரம்பத்தில் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப் பட்டுவந்த இந்தப் பொருளாதார முற்றுகையானது இன்று வெளிப்படையாகவே தெரியப் படுத்தப்பட்டிருப்பதோடு மனிதாபிமானமற்ற முறையில், உணவுப் பொருள்களில் கூட இறுக்கமான தடையைக் கொண்டு வருதலினூடாக, தனது பொருண்மிய முற்றுகையை மென்மேலும் தீவிரமாக்குகின்ற நிலையினை இன்னும் நாம் கண்கூடாகவே அறிய முடிகின்றது.


1990ம் ஆண்டின் நடுப்பகுதியில் சிறிலங்கா அரசுடனான இரண்டாவது கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப் பட்ட போது வட தமிழீழத்தின் மீது சிங்கள அரசினால்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கொண்டுவரப்பட்ட பொருளாதாரத் தடையானது வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் பகுதியில் இருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது எமக்குத் தேவையான உணவுப் பொருள்களின் கணிசமான அளவு பொருள்கள் வடதமிழீழத்தின் வளமான பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான இடங்களுக்கு கொண்டுவரப்பட்டதனால், எங்களின் உணவுத் தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. வளம்மிகுந்த எமது பகுதிகளில் இருந்து வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுத் தானியங்கள் எமது வட தமிழீழ மக்களது தேவையை ஓரளவு ஈடு செய்துகொண்டிருந்தது. நாம் எமது வளத்தினைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசினது பொருளாதார முற்றுகையை முறியடித்து வந்தோம்.

இதன் மூலம் எமது சமுதாயம் ஒரு தன்னிறைவுத் தன்மையுடன் தலைநிமிர்ந்து நிற்பதன் அவசியத்தைப் புரிந்து கொண்டது. ஆம், எமது இனத்தின் தனித்துவமும், தன்மானமும் பாதுகாக்கப்பட்டது. உழவுக்கு உதவும் எருதுகளும், நீர் இறைப்புக்குத் துலாவும் ஏத்தும், பசளைக்காக இலையும் குழையும், விலங்குக் கழிவுகளும் எங்களுக்கு ஆபத்து வேளைகளில் கைகொடுத்து வந்தன. எங்களைப் பொறுத்தவரையில் இவையொன்றும் புதிய தொழில் நுட்பங்கள் அல்ல. எமது தாய் தந்தையரால் பரம்பரை பரம்பரையாகவே கைக்கொள்ளப்பட்டு வந்த தொழில் நுட்பங்களே இவை. இந்தத் தொழில் நுட்பங்கள்தான் எதிரி எம்மீது திணித்த பொருளாதார முற்றுகையின் போது நாம் தலை நிமிர்ந்தபடி தொடர்ந்தும் இப்போராட்டத்தை முன்னெடுக்கத் துணையாயிற்று.




எழுப்பிய கொடிச் சின்னத்தின் முகங்கள்
கோரம் வாளேந்தி
கொதிக்கின்ற தாரில் குருத்தையும் கிள்ளியிட்டு
தெருவில் தமிழை எழுதி
தித்திக்குதா பார் என எள்ளி
கூடிக்கழித்த மனித முகங்களை
காண வெறுத்து ஆடிய நாள்
ஆடி 83.

எம்மீது திணித்த பொருண்மியத் தடையானது, சர்வதேச உலகத்தின் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டு, அதன் மூலம் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்பிய சிறிலங்கா அரசு, தனது பொருண்மிய முற்றுகையை இடையிடையே ஒரு குறுகிய காலத்துக்கு நெகிழ்த்துவதும், பின்னர் முன்னரைவிட இறுக்கமாக நெருக்குவதுமாக செயல்ப்பட்டு வருகிறது. இந்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நிலையைப் புரிந்து கொள்ள நாம் பொருண்மிய முற்று கையை இறுக்கிய போது எமது பாரம்பரிய விவசாய தொழில் நுட்பங்களை பயன்படுத்த ஆரம்பிப்பதும், பொருண்மிய முற்றுகை தளர்த்தப்படும் போது, பயன்படுத்த ஆரம்பித்த தொழில்நுட்பங்களை இடை நடுவில் கைவிட்டு, எரிபொருளை எதிர்பார்த்துத் தவம் கிடப்பதுமாக உறுதியில்லாது திண்டாடுகின்றோம். இதனால், பல்வேறு விதங்களில் நாம் பாதிக்கப்படுவது பற்றி சற்றேனும் சிந்திப்பதில்லை.

பொருளாதாரத் தடை நெகிழ்த்தப்படும்போது சிறிலங்கா அரசு தமிழர் மீது இரக்கம் கொண்டுவிட்டது என்ற ஒரு நப்பாசையில் கையில் உள்ள முதலையும் தேவைப்படும். போது கடன்பெற்ற முதலையும் பயன்படுத்தி ஏராளமான பரப்பளவில் பெரும்தொகை முதலீட்டுடன் புகையிலை, வெங்காயம், மிளகாய் என்றவாறு பயிர்களைச் செய்ய முயல்கின்றோம். தோட்டத்தில் பயிர் செழித்து வளர்கையில் மீண்டும் பொருளாதாரத் தடை நடைமுறைக்கு வர விவசாய உள்ளீடுகள் தடைப்படுகிறது. பெரிய முதலீட்டுடன் செய்யப் பட்டுவரும் பயிர்கள் போதிய நீர் வசதியோ, உர வசதியோ இன்றி அழிவடைகிறது. இது ஒரு வகையான தாக்கம். மறுபக்கம் இவ்வகை நெருக்கத்துக்கு முகம் கொடுத்தவாறு, எதிர்நீச்சல் போட்டபடி எமது விவசாயிகளினால் செய்யப் படும் உற்பத்திகள் சந்தைக்கு வரும் வேளையில் தடையற்ற இறக்குமதியை அனுமதிப் பதன்மூலம், போட்டிச் சந்தையை உருவாக்கி அதன் ஊடாக எமது விவசாயிகளது உற்பத்திப் பொருள்களுக்கான விலையினை வீழ்ச்சியடையச் செய்து விவசாயிகளை நட்ட மடையச் செய்வது இன்னும் ஒரு வகைத் தாக்கமாகும். இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் விவசாயிகளாகிய நாம் மீண்டும் மீண்டும் கடனாளிகளாகின்றோம்.

எமது சொத்துக்கள் விமானக் குண்டுவீச்சாலும், செல்களாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் ஒருபுறம் அழிக்கப்பட, மறுபக்கத்தில் நாமே எமது திட்டமிடாத செயற்பாடுகளால் தேடிய சொத்துக்களை இந்த வகையில் இழந்தபடி எமது சிந்தனைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் கடிவாளம் இட்டிருக்கிறோம். இது தேவையா? எமது சந்ததி தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காக, ஒரு பக்கத்தில் இரத்தத்தை வார்த்து, விடுதலை வேள்வியை நடாத்திவரும் நாம், மறுபக்கத்தில் உணவுக்காக மற்றவரை எதிர்பார்த்து வாழ்வது நன்மை பயக்குமா? விடுதலைப் போராட்டத்தின் போது, குடிப்பதற்கான நீர்த்துளிக்கு கூட நீண்ட வரிசைகளில் நின்று விலை கொடுத்துப் பெறுகின்ற நிலையில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த இஸ்ரேலியர்கள்தான், இன்று தமக்கென ஒரு நாட்டில் வாழ்ந்துகொண்டு உலகத்தின் பார்வையைத் தம் பக்கம் ஈர்த்துள்ளார்கள். கதர் ஆடை உடுத்தும், சுதேசிய உணர்வினைத் தட்டியெழுப்பிய தன்மையும்தான் இந்தியாவால் வெள்ளையரை வெளியேற்ற முடிந்தது.

இவ்வகை உதாரணங்களை அறிந்துகொண்டு நாம், இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிறிலங்கா அரசு பயன்படுத்தும் பொருளாதாரத் தடையை உடைத்து போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்கத் தாமதிப்பது நியாயமா? எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றைய நிலைவரை 40,000க்கும் மேற்பட்ட

## பண்டாரவன்னியன் உற்பத்திச்சாலை

**வவுனியாப் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் உற்பத்திச்சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பின்றி இருக்கும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் முகமாக கொந்தக்காரன் குளத்தில் ஆரம்பிக்கப்பட்ட பண்டாரவன்னியன் இனிப்பு, ரொபி, பிஸ்கட் உற்பத்திச்சாலையில் முதல்கட்டமாக பத்து பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


உயிர்களை இழந்தும், பல கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்தும், சற்றேனும் சளைக்காது 'கண்ணில் மணிபோல' காத்து வளர்த்துவரும் எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் உணவு என்ற ஒன்றுக்காக பின் தள்ளப்படுவதை நாம் விரும்புகின்றோமா?

சோறுக்காகத் தமிழர்கள் சுதந்திரத்தையே இழக்கக் கூடியவர்கள் என்று எதிர்கால உலக வரலாறுகள் எழுதப் படுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க நாம் வழிசமைத்துக் கொடுப்போமா? இன்று, நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 98,350 கெக்டயர் (நீர் நிலை தவிர்ந்த) நிலப்பரப்பு இருப்பதாக புள்ளிவிபரத் தரவுகள் கூறுகின்றன. இதில் ஏறக்குறைய 32,255 கெக்டயர் நிலப்பரப்பு கல்நிலம், பற்றைகள், சிறுகாடு, உவர், சவர் தரைகளாகக் காணப் படுகின்றன. எனவே மொத்த நிலப்பரப்பில் இந்தவகை நிலப்பரப்பு தவிர்ந்த நிலமாக 66,095 கெக்டயர் நிலம் காணப்படுகின்றது. இந்த 66,095 கெக்டயரிலும் 28,989 கெக்டயர் நிலம் வீதிகளுக்காகவும், வீடுகளுக்காகவும் ஒதுக்கப் பட்டுள்ளன. வீதிகள் கட்டடங்கள் உள்ள இந்த 28,989 கெக்டயர் நிலத்திலும் வீதி அமைந்துள்ளதும், கட்டடம் அமைந்துள்ளதும் பல்லாண்டுப் பயிர்கள் உள்ளதுமான நிலங்களாக சுமார் 19320 கெக்டயர் நிலமே காணப் படுகின்றது. அதாவது வீதிகள், வீடுகள் என்ற தேவைக்கு என ஒதுக்கப்பட்ட 28989 கெக்டயரில் 19329 கெக்டயர் நிலமே வீதி, வீடுகள் பல்லாண்டுப் பயிர்கள் என்பவற்றால் நிரப்பப்பட்டுள்ளது. மிகுதி 9,660 கெக்டயர் நிலமும் குடியிருப்புக் காணிகளாக கணிக்கப்பட்டு எதுவித பயன்பாடும் அற்று தரிசாகக் காணப்படுகின்றது. இந்த நிலம் உற்பத்திக்கு உட்படுத்தப் படுமாயின் 19,320 மெற்றிக் தொன் உணவினை உற்பத்தி செய்து பெறமுடியும். இருப் பினும் இந்த 9,660 கெக்டயர் குடியிருப்பு காணியினதும் 30 வீதமான காணிகள் இராணுவப் பகுதிக்குள் உள்ளது என்று கணிப்பிட்டு அதனை தவிர்த்துக் கொள்வோமாயின் இன்றைய நிலையில் எம்மால் பயன்பாட்டுக்கு கொண்டு வரக்கூடிய குடியிருப்புக் காணிகளாக சுமார் 6,762 கெக்டயர் நிலப்பரப்பினை உற்பத்தியில் ஈடுபடுத்த முடியும் (இது தற்போதய யாழ். மாவட்டத்தில் செய்கை பண்ணுப்பட்டு வரும் தோட்டக்காணிகளின் அளவுக்கு அண்ணளவில் சமமான நிலப்பரப்பு) இந்த 6,762 கெக்டயரும் உற்பத்திக்கு உட்படுத்தப்படுமாயின் வருடாந்தம் 13,524 மெற்றிக்தொன் உணவினை உற்பத்தி செய்து பெறமுடியும். இது யாழ். குடாநாட்டு மக்களுக்கு சுமார் 40 நாட்களுக்குத் தேவையான உணவினை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கும். ஆம். எமது வீட்டை அண்டிய பகுதிகளிலும் பொது இடங்களிலும் தரிசாகக் கிடக்கும் நிலத்தில் வருடாந்தம் எமது மக்களுக்கு 40 நாட்களுக்குத் தேவையான உணவு மறைந்து கிடக்கின்றது என்ற உண்மையை ஏன் நாம் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை?

எமது நாடு எல்லா வகையிலும் வளம் மிகுந்தது என்பதில் சந்தேகம் இல்லை. பண்டைக்கால எமது உணவு முறைகளுள் குரக்கனும், சாமையும், பயறும், உழுந்தும், ஒடியலும் ஏன் இராசவெள்ளி, கறணையும், மரவெள்ளி என்ற கிழங்குப் பதார்த்தங்களும் உணவாய்க் கொண்டு இன்னும் திடகாத்திரமாய் வாழும் எங்கள் தாய் தந்தையரின் அனுபவங்கள் எங்களுக்கு வழி காட்டட்டும். வீடுகளிலும் வெளிகளிலும் தரிசாய்க் கிடக்கும் நிலமெங்கும் எங்கள் குடும்பத்தின் பசியைத் தீர்த்திட

## தமிழீழ மாவட்டநீதிமன்றங்கள்

**தமிழீழ மாவட்ட நீதி மன்றங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். சுன்னாகத்தில், முதல் நீதிமன்றம் ஆவணி மாத நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதிகளிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பயிர்கள் செழிப்படைந்து வளரட்டும். எங்கள் உற்பத்தி, வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்தபின் விற்பனைத் தேவைக்கும் சந்தைக்கும் வரட்டும். முடிந்தவரை முழு நிலமும் பயிரிடுவோம். முடியாதபோது முயல்பவர் களுக்கு இடமளிப்போம். பயறும், உழுந்தும், சோயாவும் தரும் போசாக்குக்கு ஈடாக எந்த ஒரு தானியமும் தரப்போவதில்லை; எமது காலை உணவு பாணாக அமையாது பயிறாக அமையட்டும். உழுந்துத் தோசையும், துவரம்பருப்பும் எங்கள் உணர்வுகளைக் கட்டிவளர்க்கட்டும்.

இந்தவகையில் நாம் தமிழீழ விடுதலைக்கு வழங்கும் பங்களிப்பு தாய்நாட்டின் விடுதலையை விரைந்து பெற்றுத்தரட்டும்.

**[தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்]**



**முன் அட்டைப்பட விளக்கம்**

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் செஞ்சோலைச் சிறுவர்களுடன்.





காலாகாலமாய் எமது மக்கள் வாழ்ந்த வீடுகள் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தால் எரிக்கப்பட்டு, அடித்துத் துரத்தப்பட்டு அகதியாக நிற்கிறார்கள். எமது சொந்த தேசத்தில் அல்லறும் எமது மக்களின் துயரத்தை கவிதையாக எழுதி அனுப்புங்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்








# அக்கரைப்பூக்கள்

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,**

ஐயா! தங்களின் மாத இதழ் எங்களுக்காக வெளிவருவதை தொடர்ந்து வாசிக்கும் தமிழர்களில் நானும் ஒருவன். உங்கள் ஆக்கங்கள் வெகு சிறப்பாகவும் மனதைக் கவரக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது.

ஆனையிறவு படைத்தளத்தைச் சூழ அமைக்கப்பட்ட பதுங்குகுழிகள், புலிவீரர்கள் ஆனையிறவு சமருக்கான திட்டமிடல் (சமர்) புகைப்படம் நன்றாக இருந்தது; மனதைக் கவர்ந்தது. எரிமலை தொடர எனது நல்லாசிகள், நல்வாழ்த்துகள்.

அ. கனிஸ்ரா A. K

**எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**

புதுப்புதுப் பொலிவுடனே மாதா மாதம் மலர்கின்ற எங்கள் அன்பான எரிமலையே, மாவீரர் சமாதிகள், எழில்மிக்க புகைப்படங்களை வெளியிட்டு வருகிறீர்கள். வாழ்க தமிழ். வளர்க உன் பணி.

ம. றெஜினொல்ட்.
*75018* பாரிஸ்.

**நமக்காகவே பணியாற்றும் எரிமலை ஆசிரியர் அமைப்பிற்கு,**

எரிமலை என்ற ஏட்டை தவறாமல் புரட்டுபவர்களில் நானும் ஒருவன். இதழில் ஒவ்வொரு முறையும் பதிவாகும் மாவீரர்களின் காலத்தால் அழிக்க முடியாத ஒவ்வொரு செயல்களும் எம்மை ஆனந்தமாக விளிக்கச் செய்கின்றன. இன்னும் படங்கள் யாவும் தன்னிகரற்றவை.

போராடத்தான் முடியாது போனாலும், போராடுபவர்களையாவது அறியவேண்டாமா என்ன! இதேபோல் மீண்டும் மீண்டும் தகவல்களைத் தந்து அயர்ந்து இருக்கும் உள்ளங்களை சுறுசுறுப்பாக இயங்கச் செய்யுங்கள் என அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

சி. சிவலிங்கராசா, ஜெர்மனி.

எரிமலை நன்றாக இருக்கின்றது. ஊர் நடப்புகளை அறியக்கூடியதாயிருக்கு. எப்ப போவம் என்று கவலையோடு இருக்கிற எங்களுக்கு ஒரு நண்பனைப்போலவே. எனக்கு வயதாகிவிட்டது. வேலைக்குப் போவதில்லை. இதனால எனக்கு எரிமலையைப் படிக்கிறதுக்கு நிறைய நேரமிருக்கு.

அருமையான புகைப்படங்கள். பக்கம் விடாம வாசித்துப் போடுவன்.

மதி, ஊர்காவற்றுறை.

**எரிமலை ஆசிரியர்களுக்கு,**

மண்ணைப்பற்றிய நிகழ்வுகளை அறியவும், எமது மண் மீது மேலும் பற்றை வளர்த்து எம்மை கண நேரங்களாவது மண்ணில் உலா விட வைக்கிறது. வாசகர் கடிதம் விரும்பிப் படிப்பேன். போராளிகளின் தியாகங்களையும் போராட்டத்தைப் பற்றியும் அறிய வைக்கிறது. ஏன் நீங்கள் வெளிநாட்டுப் போராட்டங்கள் பற்றியும் எழுதலாம்தானே?

எரிமலை எங்களுக்கு ஒழுங்காக வந்து சேருவதில்லை. மாதாமாதம் எமக்கு கிடைக்குமாறு ஒழுங்கு செய்து தரமுடியுமா? எப்போதாவது கிடைக்கிற எரிமலை எனக்கு அமுதம் போல.

சிறிபத், சவுதீ.

**எரிமலை குழுவினருக்கு,**

எரிமலை நல்லாயிருக்கிறது. செய்திகள் பிந்திக் கிடைக்கின்றன. ஆனால் தரமாயிருக்கு. வடிவமைப்பு ஒரு நல்ல வளர்ச்சியைக் காட்டுகிறது.

பரமு, பாரிஸ்.

**அன்புடன் 'எரிமலை'க்கு,**

ஆனிமாத 'எரிமலை' பல்வகை சிறப்பம்சங்களுடன் வெளிவந்திருந்தது. ஒவ்வொரு பக்கமும் நம் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றையும், முக்கியத்துவத்தையும் வெளிக்கொணர்ந்து நின்றது. ஒரே ஒரு சிறிய குறை. "சின்னஞ்சிறு பூக்களுடன் சில பொழுதுகள்" மற்றும் "தமிழீழத் திருநாட்டில்" உருவகக் கதையும் ஏற்கனவே விடுதலைப் புலிகளின் வெவ்வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையே. தவிர்த்து புதிய கதைகளைத் தந்திருக்கலாம் அல்லவா? மேலும், கேள்வி பதிலையும் எரிமலையில் வாசகர்களுக்காக ஒதுக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

இங்கனம்

எரிமலை விரும்பி S. சாந்தன்

**அன்புடன் எரிமலை ஆசிரியருக்கு,**

எரிமலை என்ற இதழை தவறாது படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். தமிழீழப் போராட்டத்தில் ஏற்படுகின்ற இன்ப், துன்பங்கள், மிகப் பெரிய அரிய சாதனைகள் இவற்றை வெளியிட்டு கடல் கடந்து வாழும் எமக்கு ஒரு புது உணர்வை ஏற்படுத்துகின்ற எரிமலைக்கும், அதனைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். எரிமலை மேலும் வளர என்றும் என் நல்லாதரவு.

சதீஸ்
ஏழாலை.


**அன்பின் எரிமலையே நீ**

இனிய இனிய உணர்ச்சிகளுடனே
மாதம் தோறும்
பூவைப்போல மலர்கின்றாய்
என்றும்
எரிமலையே! உம்
இனிய இதழை வாழ்த்தி
கவிதையாக எழுதுகின்றேன்.
பட்ட மரம்
செழித்தது போல்
சும்மா சுத்தின என்னை
திருத்தினாய்!
உணர்ச்சிகளும் ஊட்டினாய்
ஈழ மண்ணின் தவிப்புகளையும்
வரலாறுகளையும் எங்களுக்கு கூறி
விழிப்படைய வைக்கும்
இதழே! எரிமலையே!
விடுதலை விழிப்புக்களை தாங்கி
வரும் எரிமலையே! உன்னை
வாழ்த்தி எழுதிடுவேன் பல கோடி.
என் இனிய வாழ்த்துகள்

S. சுதன், பாரிஸ்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சுதந்திரத்தைத்தேடி..

சீத்தா

இனிமையான தென்றல் தழுவிய குருத்துகள், சிலிர்த்து, ஜில்லிட்டு, நிமிர்ந்து புதினம் பார்க்கும் புற்கள், பனிபடிந்த பற்றைகள், காலைச் சூரியனின் கதிர்கள் பட்டுப் பளபளக்கும் நெற்கதிர்கள்........

இப்படியான குளுமைகளை யெல்லாம் தன்னுள்கொண்டு, குழந்தை போல் பளிச்சென்றிருந்த கிளிநொச்சியில் அழகிய சிறு குடில். அந்த ஆனந்தமான குருவிக் கூட்டில் தாமோதரம், சரோஜா என்ற தம்பதிக்கு வாரிசாக சிணுங்கிய வண்ணணம் 1973.12.02 அன்று தன் பிஞ்சுடலை இந்த மண்ணின் புற்பாயில் மலர்த்தினாள் கல்கி (ருக்குமணி). கிழவிகளும், கிழவர்களும் தம் தொணதொணப்புப் பேச்சுடன் தூக்கி, வெற்றிலைச் சாறு படியக் கொஞ்சவும் பலர் தூக்கி மகிழவும் ஒரு குழந்தையானாள்.

இவளுக்குப் பின் இரு சகோதரிகள். இவளின் பேத்தியார் மகிழ்வுடன் எல்லாரிடமும் "பாருங்கோ, இவள் ருக்கு கால் கழுவி விட்டு, கால்ல மண் படாமலிருக்க, செருப்புக்குக் கீழை பேப்பர் போட்டு நடக்குது."

என்று பொக்கை வாயால் சொல்லிச் சிரிப்பாள்.

பேத்தியாரின் பொக்கை வாய்ச் சிரிப்பை, தான் விளையாடிய முற்றத்தை, இவளுடன் அடித்துப் பிடித்து ஓடி விளையாடிய அயல் வீட்டுச் சிறுவர்களை, கிடைத்த காசில் மிட்டாய் வாங்கும் 'பயங்கரவாதம்' கடையை, விறகு பொறுக்கிய பற்றைக் காட்டை, சில காலம் தந்தையில்லாத போது அவள் வேலை செய்த வயல் வெளியை, அந்தக் கோயில் மணியோசையை, எல்லா வற்றுக்கும் மேலான அன்புத் தங்கைகளை, அம்மா, அப்பாவை அந்தக் குருவிக் கூட்டையே விட்டுச் சுதந்திரம் வேண்டி, மண்ணின் விடிவுக்காக தன் பாதத்தை ஆழமாகப் பதித்துக் கிழக்கு நோக்கி நடந்தாள்.

1990.08.15ல் புதியவளாக கல்கி என்னும் பெயர் தாங்கி, பதினான்காவது பயிற்சிப் பாசறையில் பயிற்றுவிக்கப் பட்டாள். நீண்டு முழங்கால் வரை தொங்கும் அடர்ந்த கூந்தல், கட்டையான சிவந்த உருவம், சற்றே மிதந்திருக்கும் பற்கள், காற்றில் தத்தளிக்கும் அவளது கொச்சைத் தமிழ், பயிற்சியின் போதான உற்சாகம், மீதி நேரத்தில் தனிமையில் சோர்வான தன்மை..... இவை எல்லாமே இவளை மற்றவர்களிலிருந்து வித்தியாசமாக வேறுபடுத்திப் பார்க்க வைத்தது. இவளது நகைச்சுவையுணர்வும், அந்தச் சுத்தமும் இவளைப் புதிராகக் கவனிக்கத் தூண்டியது. பயிற்சியைத் திறமையாகச் செய்தாள். இடையிடையே வயிற்றுக்குத்து என்று 'கவரும்' எடுத்தாள். ஆனால், குறிபார்த்துச் சுடுவதில், நீண்ட தூரம் குண்டு எறிவதில் அபாரமான திறமையைக் காட்டினாள். கூடவே நீச்சலும் இவளுக்குத் தெரிந்திருந்தது. கிராமத்தின் அருவிகள், குளங்கள், வாய்க்கால்களில் தந்தையால் நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டவள். மீன் குஞ்சுபோல் நீந்தி மகிழ்ந்தவள். நீச்சல் பற்றிக் கேட்டால், ஒருகணம் தன் சிந்தனை வாகனத்தில் தன் கிராமத்துக்குச் சென்றுவருவாள்.

கல்கியின் முதற்களம் சிலாவத்துறை.

பின், ஆனையிறவு 'பலவேகய ஒன்றில்',

பலாலிக் காவலரணில், மணலாற்றுக் காட்டில் நிகழ்ந்த 'மின்னல்' இராணுவ நடவடிக்கையில்.....

அப்போது அவள் கையில் ஆயுதமில்லை. தனது பொறுப்பாளரிடம் ஒவ்வொரு நாளும் இரந்து கேட்பாள்.

"அக்கா, ஆம்ஸ் தாங்கோக்கா. நான் நல்லாக் கவனிப்பன். நல்லா அடிபடுவன்."

என்று தன் கொச்சைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழில் அழுவது போல் கேட்பாள். பொறுப்பாளர்,

"நீ கெட்டிக்காரி, அடிபட்டு எடுப்பாய்".

என்று சமாதானம் செய்வார். கல்கியும் தன் தோழிகளிடம் உறுதியாகவும், ஆனால் ஆதங்கத்துடனும் கூறுவாள்,

"பார், நான் அடிபட்டு ஆம்ஸ் எடுப்பன்".

கொக்குத் தொடுவாயில் நடந்த பதுங்கித் தாக்குதலில் திறமையாகப் போரிட்டாள். அப்போது இவள் திறமை பொறுப்பாளருக்கு கூடுதலாக விளங்கியதால் எம்70 ரகத் துப்பாக்கியை இவளுக்குக் கொடுத்தார். கல்கியின் கைக்கு எம்70 வந்த கதை இதுவே.

ஒருநாள் கல்கி சோர்ந்துபோய் யோசனையில் ஆழ்ந்த வண்ணம் இருந்தாள். அன்று அவளின் ஊரிலிருந்து வந்த போராளி ஒருத்தியுடன் கதைத்த பின்னர்தான் இப்படியாகிவிட்டாள். பகிடிக்கார கல்கி சோகமானவளாக மாறிவிட்டாள். காரணம்.....? நீண்ட நாட்களுக்கு ஒருவருக்கும் தெரியாது. பின்னர்தான் தெரிந்தது. அவளது பெற்றோர் வைத்தியத்துக்காக கொழும்பு போனபோது இராணுவத்தினர் பிடித்துவிட்டதாகவும், அவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளே இல்லை எனவும், அவளது தங்கைகள் வேறு வேறு உறவினர்கள் வீடுகளில் வளர்வதாகவும் அறிந்து கவலை கொண்டாள். அவளால் தனிமையில் இருக்கத்தான் முடிந்தது. எல்லாம் கொஞ்சக் காலம்தான். தனது தனிப்பட்ட துன்பத்தை தன் மனதுக்குள் மூடிமறைத்தாள். சக தோழிகளைச் சுரண்டி, வம்புக்கிழுத்து, விளையாடி, குத்துக்கரணம் அடித்து, கூக்காட்டி வழமைபோலானாள். சிறிது காலத்தின் பின் யாழ்ப்பாணம் வந்தாள்.

இடையில் "தேவையேற் படின் முடி வெட்டலாம்" என்ற உத்தரவு வந்தது. இவள் தனது நீண்ட தலைமுடியை வெட்டி னாள்.

"எடி, முள்ளுப்பன்றி வருகுது".

என்று தோழிகள் கேலி செய்தனர். உண்மையிலேயே தலைமுடி படியாமல் குத்திக் கொண்டு, பார்க்கவே சிரிப்பாக இருந்தது.

மணலாற்றில் புதிய போராளிகளைப் பயிற்சி கொடுத்து வளர்ப்பதற்காகக் காடு நோக்கிப் பயணம் தொடர்ந்த வேளைதான் இவள் எனக்கு நன்கு பழக்கமானாள்.

அங்கு நின்றவர்களில் கல்கியே நான் அறிந்தவரையில் கூடுதலான தண்டனைகள் வாங்கியவள். ஆனால், கூடுதலான குறும்புக்காரியும், திறமையா னவளும் கூட அவளேதான்.

அடிக்கடி அனுமதி இல்லாமல் களவாகக் குளிப்பதில் கல்கியே வலு விண்ணி. இதை மற்றவர்கள் எனக்குச் சொல்ல மாட்டார்கள். ஆனால் இவள் வெளியே வரும் வரைக்கும் காரணமில்லாமல் காத்திருப் பார்கள். நானும் என்ன இது என்று பார்த்துக் கொண்டிருக்க, கல்கி குளித்துவிட்டு மெல்ல மெல்ல காலைத் தூக்கிவைத்து நடந்து வருவாள். மண் தெறிக் காமலும், களவாகக் குளித்தது தெரியாமலும் இருக்கவுமே அவள் அப்படி நடந்து வருவாள். இவள் குளிக்கும் வரை வெளியே காத்திருக்கும் மற்றவர்கள் இவள் வெளியே வந்ததுமே,

"வாங்கோக்கா, பொச்சுப் போட்டுக் கால் தேச்சனீங்களோ?



போர்க்களத்தில் உருமறைப்புடன் நிற்கும் ஒரு பெண் போராளி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொல்லாமலோ குளிச்சனியள்?"

என்று ஆள்காள் அவளை அமர்த்தி, காலுக்கு மண்ணப்பு வார்கள்.

கல்கி திமிறி, எல்லோரையும் துரத்தி அடித்துவிட்டு, என்னைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன்

"ஊத்தைக் கால் கழுவிட்டு வாறன்."

என்று தென்னம்பொச்சு ஒன்றைத் தூக்கிக் கொண்டு, தன் கள்ளம் தெரியக்கூடாது என்று நழுவிவிடும் அவளுக்குத் தண்டனையா கொடுக்க முடியும்? சிரித்துவிட்டு நானும் சென்றுவிடுவேன்.

இவளது குறும்புடன் திறமையும் வளர்ந்தது. ஆண்டாள் ஒன்றில் (பயிற்சி முகாம்) பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த 30 பயிற்சியாளர்களை (ஆறுநாள் பயிற்சி மட்டுமே எடுத்தபடி) 'கஜபார' சண்டைக்குக் கூட்டிச் சென்று திறமையாகச் செயற் பட்டாள். அவள் பொறுப்புக்குப் புதிது. பிள்ளைகளும் புதிது. இவள் குளப்படி வேறு என்னைப் பயமுறுத்திய வண்ணம் இருந்தது. ஆனால் ஓயாத ரவை அடிக்குள்ளும், எறிகணை வீச்சுக்குள்ளும் மறைந்திருந்து, திறமையுடன் செயற்பட்டு, விரைவாக பிள்ளைகளுக்கு உதவிக் குழுவுக்குரிய வேலையைப் பழக்கினாள்.

அவளது திறமையைக் கண்டு, அவளுக்குச் சண்டையு டன் நிர்வாகத் திறமையும் வளர்வதற்காக, முகாம் ஒன்றிற்குப் பொறுப்பாக நியமித்தேன்.

சில வேளைகளில் நான் வானொலியில் பாடலைப் போட்டுவிட்டு அப்பால் முகாமைச் சுற்றிப்பார்க்கச் சென்றுவிட்டால், நான் இல்லை என்ற தைரியத்தில், கல்கி உடம்பை நெளித்து நெளித்து பைலாப் போடுவதை நான் பலமுறை ஒளித்து நின்று பார்த்திருக்கிறேன். சிரிப்பு தாளாது. அந்தப் பாடலை இப்போதெல்லாம் நான் கேட்பதில்லை. நெளிந்தாட அவளா இருக்கிறாள்?

விடிந்தால் அவளின் பல்லவிதான்.

"அக்கா, எனக்கு அது வாங்கித் தாங்கோ, இது வாங்கித் தாங்கோ."

காசில்லாத நேரம் அவளின் தொண தொணப்புத் தாங்காமல்,

"எனக்கு ஓஃபீசுக்கு ஒண்டும் வேண்டாம்; நீயே எடு."

என்று கோபமாக நான் கூறியதைச் சாட்டாக வைத்துக் கொண்டு திரைச் சீலையில் இருந்து, அழிறப்பர் வரை எனக்குத் தெரியாமல் கொண்டு போய்த் தன் முகாமை அழகுபடுத் தியதும் போதாமல், பின் என்னையும் மற்றவர்களையும் தொலைபேசியில் அழைத்தாள். என் முகாமில் உள்ள போராளி களையும் கூட்டிக்கொண்டு சென்றேன். முகாம் பளிச்சென்றி ருந்தது (தேவையான உருமறைப்பு களுடன்). காவலரண்களில் நின்ற போராளிகள் தம்மை உருமறைத் திருந்தனர். உள்ளே சென்றோம்.

"சா.... நல்ல வடிவா இருக்குது கல்கி. நீற்றாய் இருக்கு. இந்த ஓபீசைப் பாருங்கோடி."

என்று பாராட்டிய போராளிகள், கல்கியின் அலுவலகத்தில் இருப்பவை யெல்லாம் என் அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்டவை என்பதைக் கவனித்துவிட்டார்கள். அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது.

"இஞ்ச பாரடி, அக்கா தன்ரை ஓபீஸ் சாமானையெல் லாம் கல்கிக்கு குடுத்திருக்கிறா."

இந்தச் செய்தி தொலை பேசி மூலம் ஏனைய முகாம் களுக்கும் தெரிவிக்கப்பட்டது. நான் தங்களுக்குத் துரோகம் புரிந்து விட்டதாகவும், கல்கிக்குக் கொடுத்தது போலத் தமக்கும் தரவேண்டும் எனவும் ஒரு யுத்தமே புரிவார்கள் போலிருந்தது.

கல்கி சிரித்துக் கொண்டிருந் தாள். அவளைக் கோபமாகப் பேசமுடியாதபடி பக்கத்தில் பிள்ளைகள். எல்லாமே கொஞ்ச நேரத்துக்குத்தான். மற்றவர்கள் அவளை மன்னித்துவிட்டார்கள். நான் தேநீர் கூடக் குடிக்காமல், ஒன்றுமே கதைக்காமல் என் முகாமுக்கு வந்துவிட்டேன். நான் கதைக்காமல் வந்ததே கல்கிக்குப் பெரிய தண்டனை. அன்று இரவு அவள் என்னிடம் வந்து மன்னிப்பு கேட்ட விதம்......

ஒரு தடவை இவள் தனது இலக்கத் தகட்டைத் தொலைத் துவிட்டாள். இவளுக்குத் தண் டனை ஒருமாதச் சமையல். அது எங்கள் எல்லோருக்குமே தண்ட னைதான். பருப்புக்கு என்னென்ன போடுவது என்றில்லாமல் தன் விருப்பப்படி ஏதோவெல்லாம் போட்டு..... அரிசிமாவில் பலகாரம் சுடப்போவதாகச் சொல்லி, ஏதோவொன்றைச் செய்து தந்தாள்.

"எல்லாம் சரி வாங்கோ."

கல்கியின் உத்தரவு கேட்டது. அது சண்டைக்கான மாதிரிப் பயிற்சி. எங்களுடைய போராளிகளே இராணுவத் தினராகவும், போராளிகளாகவும் இருபகுதியாகப் பிரிந்து, நேரடி யாக மோதிப்பார்த்துப் பயிற்சியெ டுத்துக் கொள்ளோம். அடிக்கடி இவள் இராணுவத்தினனாகத்தான் வருவாள், உண்மையான இராணுவத்தினனைப் போல.

"அடே கொட்டியா, என்னவா,"

என்றவாறு வருவாள்.

"ஏற்கனவே இவளின்ரை தமிழ் அப்படி. இப்ப சிங்களம் வேறை."

என்று பிள்ளைகள் தமக்குள் சொல்லிச் சிரித்துக் கொள்வார் கள்.

புலிகளாகப் பதுங்கிப் படுத்திருந்த போராளிகள், இராணுவ உயரதிகாரியாக வரும் கல்கியைப் பிடிப்பதாகத் திட்டம். கல்கியின் வழிநடத்தலுடன் (ஏற்கனவே வேவு எடுத்ததன் படி) இராணுவ நகர்வு நடந்துகொண் டிருக்கும்.

"டமார்" பெரிய ட்ரம்மில் ஓங்கி ஒரு அடி). சரி கிளைமோர் வெடித்துவிட்டது.

"அட்வான்ஸ் அடி குடு"

"டமால். டுமீல்... ..டமால்.....டுமீல்....."

(வாயால் சுடுவது போல

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சத்தம் செய்வார்கள்).

கல்கி பிடிபட்டால்தானே? பாய்ந்துவிடுவாள். புலியாகப் படுத்திருந்தவர்களுக்கு ஆத்திரம். எப்படியும் கல்கியைப் பிடிக்க வேண்டும். திட்டம் உடனே மாற்றப்பட்டது. நிலைகள் சற்றும் எதிர்பாராத வகையில் மாற்றிய மைக்கப்பட்டன. (உண்மையான வரைபடத்தில் அப்படியொன்றும் இருக்காது).

மீண்டும் நிலையெடுத்து,

"டமால்....டுமீல்......டமால்.....டு மீல்........

கல்கியை ஒரே அமுக்கு.

"சிங்கள வடுவா"

என்று கத்தியவாறு கல்கியைக் கட்டிவைத்து உதைதான். எல்லோரும் சேர்ந்து சாத்துவார்கள்.

"மகே அம்மே. கொட்டியா அடிக்கிறான். அனே, நோகுது."

என்று நகைச்சுவையாகக் கூக்கிரலிடும் இவளை அவிழ்த்துவிடுவார்கள்.

"கல்கி, நீ ஏன் நெடுக ஆமிக்கு வாறாய்? இந்த முறை நீ புலி" என்று நான் சொல்ல,

அவள் முகம் மாறிவிட்டது. பின்தான் விளங்கியது.

"புலியெண்டால் உருமறைச்சுக் கனநேரம் ஆடாம, அசையாம படுத்திருக்க வேணும். ஆமியெண்டால் சாப்பிடுறது எல்லாம் சாப்பிட்டு, குடிக்கிறதெல்லாம் குடிச்சு, ஒரு சின்ன நித்திரையும் கொண்டு......"

இதுதான் கல்கி எனக்குச் சொன்ன காரணம். எனக்கு வந்த ஆத்திரத்தில்,

"அலேட் பொசிசனில் இருவத்தினாலு மணித்தியாலம் நில்!"

என்று தண்டனை கொடுத்துவிட்டேன். பின் அவளைப் பார்க்கப் பாவமாக இருந்ததால் பத்து நிமிடத்திலேயே இறக்கிவிட்டேன். ஆனால் இவள் நான் தன்னை இருபத்தினான்கு மணித்தியாலம் உசார்நிலையில் நிறுத்தினேன் என்றும் அதனால் தனக்குக் காவற்கடமை இல்லை என்றும் சொல்லிவிட்டுப் படுத்து றங்கியதாகக் கேள்விப்பட்டேன்.

கடைசி நிமிடத்தில் கூட இவளால் எப்படி இப்படி பகிடி விட முடிந்தது? இவள் ஒரு குழுவுக்குப் பொறுப்பாளரும் கூட.

அன்றும் அப்படித்தான். பிள்ளைகளோடு சரிக்குச் சரியாக நின்று சண்டை பிடித்தாள். விளாத்தித் தோட்டம் தனது என்று அடம்பிடித்து,

"இது அக்கா எனக்குச் சீதனமாகத் தந்திருக்கு. ஒருதரும் உள்ளே வரவேண்டாம்."

என்று சொல்லிவிட்டாள். பிள்ளைகள் கெஞ்சினார்கள்.

"எங்கடை அக்காவெல்லோ ஒரு விளாங்காயாவது ஆய விடுங்கோ."

"ம். சரி. ஆயுங்கோ."

என்று அனுமதித்துவிட்டு, குரங்குகள் போல் மரங்களின் மேலே பிள்ளைகள் தொங்கிக் கொண்டு நிற்கும் போது, என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவாள். நான் வரப்போகின்றேன் என்று பயத்தில் பிள்ளைகள் பதற்றத்துடன் இறங்கி ஓடுவார்கள்.

அதைப் பார்த்து நானே சிரி சிரியென்று சிரித்தேனே.... விளாத்தியடியில் நான் போய்ப் பார்த்தேன், கல்கியின் காலடித் தடயம் இருக்குமே என்று. பிள்ளைகள் அழுதார்கள்.

"இதிலதானக்கா, இந்தக் கட்டையிலதானக்கா கடையியாக இருந்தவ. கல்கியக்கா கடைசியா இருந்து சாப்பிட்டது இந்தக் கட்டையிலதானக்கா."

அந்தக் கட்டையை உயிருள்ள பொருளைப் பார்ப்பது போல அவளின் பிள்ளைகள், ஏன் நான் கூட மற்றவர்களுக்குத் தெரியாமல் தொட்டுப்.....

கொக்குத் தொடுவாய் இராணுவ முகாமுக்கும், கோட்டைக் கேணிக்கும் இடையில் நகரும் இராணுவத்தினரைப் பதுங்கியிருந்து தாக்குவதற்காக ஒத்திகை பார்த்து முடிந்துவிட்டது. சண்டைக்குச் செல்லத் தயார்.

எங்கும் பச்சை. அது காட்டுப் பிரதேசம் என்பதால் தனிப்பச்சை, வரிப்பச்சைக்

விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கோடுகள், பூக்கள், இப்படியான பச்சை உடைகள், தலைகளில் சாக்குத் தொப்பி, தண்ணீர்க்கான், குழுத்தலைவிமார், தலைவிமார் எல்லோரிடமும் வோக்கி, திசைகாட்டி, ஆயுத அறிக்கை பைல், பொறுப்பாளர்மாரின் ஓட்டம், சுறுசுறுப்பு, உத்தரவுகள், விசாரணைகள், மீள்பரிசோதனைகள், பொருட்கள் பரிமாற்றம், மொத்தத்தில் ஒருவித உயிர்த் துடிப்பு. மனதையும், வயிறையும் ஏதோ செய்யும் உணர்வு. எல்லாம் சரிவர வேண்டும். இழப்புக் குறைவாக இருக்க வேண்டும். என் இதயம் துடிப்பது எனக்கே கேட்பது போல்.....

"அக்கா, அங்க பாருங்கோ"

பிள்ளைகளின் குரல் கேட்டுத் திரும்பினேன். கல்கி...... கரும்பச்சைச் சீருடை, கறுப்புச் சப்பாத்து, கரும்பச்சைத் தொப்பி, கொல்சரில் வோக்கி..... எல்லோருமே அப்படித்தான். மிகவும் சீராக, பார்க்கவே மிகவும் அழகாக இருந்தனர். மெல்ல, ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான பிள்ளைகளையும் கூப்பிட்டு,

"நல்லாச் செய்யவேணும்"

என்ற என் கைகளை அவர்களின் கைகள் அழுத்தி உறுதி தந்தன. கல்கி என்னுடன் நீண்ட நேரம் நிற்பதை உணர்ந்த நான்,

"கல்கி, போய் உன்ரை குறூப்பைக் கவனி" என்றேன். எனக்கு ஏதோ கல்கியைப் பார்க்க ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது.

"அக்கா..... அக்கா......"

மெல்லத் தயங்கினாள். கலங்கினாள்.

"கல்கி, என்னம்மா?"

"தங்கச்சி கவனம். அம்மா..... அப்பா....." என்று தடுமாறினாள். ஒரு கணம் அன்று நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அண்மையில் கல்கி விடுமுறையில் வீட்டுக்குப் போய் வந்திருந்தாள். அவளது பேத்தியார், அம்மாவும் அப்பாவும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் தன்னை இந்த உடையில் பார்க்கவில்லை எனவும் கூறியதாக வந்து சொன்னாள்.

கல்கியின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட நான், "அம்மா, அப்பா வந்த உடனே கட்டாயம் உன்னை ஒரு மாத லீவில் கேட்டு விடுறன்.... அவை விரும்பினால் தங்கச்சிமாரை நான் படிப்பிக்கிறன்."

என்று வாக்குக் கொடுத்தேன். ஆனால், அவர்கள் வரவேயில்லை.

எல்லோரும் நகரத் தொடங்கினோம்......

நீண்ட நடைக்குப் பின் எமக்கான இடம். அவரவர் தத்தம் இடங்களுக்குப் பிரிந்து சென்றனர். சிறு ஓசைகூட இல்லை.... பச்சையோடு பச்சையாக....

மெல்லிய கறுத்த உருவங்கள் சத்தம் இன்றி நகர்வது தூரத்தில் தெரிகின்றது. அட, எம்மவர்தான். அப்பால் முன்னுக்கு நிலையெடுக்கச் செல்கிறார்கள். விடிந்தது.

காலைப் பனி படர்ந்த புற்கள். பல்லும் பல்லும் சண்டையிட்டன. தொப்பியை மீறிய குளிர் நிலைகளில், ஈரலிப்பான புல் நிறைந்த தரையில் இரை தேடும் புலியாய், ஆடாமல், அசையாமல், பச்சையாய் எம்மவர்கள்தான். வோக்கியில் உரையாடல்கள் தொடர்கின்றன. எமக்குக் கிட்டக் கிட்டவாக.....

"டமார்.... சடச்சட்ச.... டடம்... டடம்...டும்... டமார்..."

இப்போது நடப்பது உண்மையான சண்டை.

"ஸ்க்... ஸ்க்..."

இப்போது உண்மையான ரவைகள் பறந்தன. திடீரென எம் தலைக்கு மேலாக,

"ஸக்... டமார்..."

அட! எறிகணை!

"எல்லாம் கவர் எடு"

பின்னாலிருந்து யாரோ கத்துவது கேட்டது.

"அடி தங்கச்சி. அடியடா டோய்...."

யாரோ ஒரு போராளி உத்வேகத்துடன் கத்தியவாறு போரிட்டுக் கொண்டிருந்தான்.

காயப்பட்டவர்களும், வீரச் சாவடைந்தவர்களும் அவர்கள் தம் உயிரைக் கொடுத்துக் கைப்பற்றிய ஆயுதங்களும் பின்னுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

எல்லோரையும் பரிசோதித்து அனுப்பிக் கொண்டிருந்தேன். பிள்ளைகள் கல்கியைக் காவி வந்தனர். அதுவரை அவள் வீரச்சாவடைந்தது எனக்குத் தெரியாது. நெஞ்சிலும் மார்பிலும் குண்டு பாய்ந்து, உடல் முழுக்க குருதி தோய்ந்தபடி கல்கி.

அன்று குழந்தையாக இருந்தபோது வெற்றிலைச்சாறு படிந்து சிவந்த அவள் கன்னங்கள், இன்றும் சிவந்திருந்தது குருதியில் நனைந்ததால்.

பிள்ளைகளிடம் கேட்டேன்.

"எப்படி....? என்ன நடந்தது....?"

பிள்ளைகள் ஏதோ கூறிக்கொண்டு போனார்கள். எனக்கு ஒரு மாதிரியாக..... என் மனதுக்குள் ஏதோ ஒரு மாதிரியாக.... எல்லாவற்றுக்கும் விடை கிடைக்க நடந்தேன்.

கல்கி இறுதியாக,

"என்ரை குறூப் பிள்ளைகள் கவனம். ஒண்டையும் தவற விடாதேங்கோ." என்றாளாம்.

"என்ரை தங்கச்சியிட்டைச் சொல்லுங்கோ, அக்காட்டைச் சொல்லுங்கோ"

என்று சொன்னபடியே இருந்தாளாம். பிள்ளைகள் விம்மலுடன் கூற, நான் அப்போதைக்கு மரத்துப்போன இதயத்துடன் அவளையே பார்த்த வண்ணம்..... அவள் ஸ்ரெச்சரில் கண்மூடியபடி.....

கல்கி உண்மையில் குளப்படிதான். ஆனால், நல்ல போராளியாய், நல்ல பகிடிக்காரியாய், நல்லதொரு ஆயுதப் பராமரிப்பாளராய், நல்லதொரு பொறுப்பாளராய், நல்லதொரு சகோதரியாய், தோழியாய், பிள்ளையாய், பிள்ளைகளுக்குத் தாயாய்....

அவளின் உடலை அதே பனி படர்ந்த, தூசி படிந்தும் படியாததுமான புற்களையும்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஓங்கி வளர்ந்த மரங்களையும் இருமருங்கிலும் கொண்ட வீதியில் எடுத்துச் சென்றோம். அவளின் அம்மாவும் அப்பாவும் இன்னும் வரவில்லை.....

அன்று இவளுடன் விளையாடிய சிறுவர்கள் இன்று பெரியவர்களாகிக் கைகட்டி நிற்க.....

தாலாட்டுப்பாடி மகிழ்ந்த பாட்டி தன் வெற்றிலைக் கறைபடிந்த வாயால் ஒப்புச் சொல்ல.....

கூடவே படித்த தோழியர் கண் கலங்க.....

அதே மண்ணில், அதே வாங்கில், ஆனால் முன்போல் நெளிந்து சிணுங்காமல், பெரிய பிள்ளையாக, வீராங்கனையாக உறங்கிக் கொண்டிருக்கும் கல்கியின் சீருடை தழுவிய உடலைத் தங்கை கட்டி அழுதாள். பாட்டி மண்ணில் தலைவிரி கோலமாக.....

கல்கியின் பிள்ளைகள், தோழிகள் இறுகிய கைகளில் துப்பாக்கியுடன், இறுகிய உதடுகளுக்குள் அழுகையை அடக்கி, நிமிர்ந்து அஞ்சலி செய்தவண்ணம் பாண்ட் இசையுடன் முன்னே செல்ல.... மக்களின் அஞ்சலிக்காய் இவளின் உடல்....

கல்கியின் 'சுத்தமான' பாதங்களில் வெள்ளைக் காலுறை, கண்கள் மூடியவாறு, முள்ளம்பன்றித் தலையுடன், சவப்பெட்டியில் ஊர்வலமாய்....

'பயங்கரவாதம்' கடையையும் கடந்து, மாவீரர் துயிலும் இல்லம் வரை.......

மக்கள் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்கள்.

தாய், தந்தையர் வருவார்கள் என்ற அவளின் கனவு, கனவாகவே போய்விட்டது.

ஆனாலும் அவள் அமைதியாக உறங்குவாள். அவள்மீதும் அவள் போன்ற ஆயிரமாயிரம் வேங்கைகள் மீதும் உறுதி எடுத்து, அவர்களின் பணியை நாம் தொடர இருப்பதால்......






# சித்த மருத்துவக் கண்காட்சி

யாழ். மாநகர சபையின் சித்த மருத்துவப் பகுதியினரின் மூலிகைகள், மருந்துவகைகள் அடங்கிய கண்காட்சி ஒன்று நல்லூர் சிவன்கோவிலுக்கு முன்பாக இடம்பெற்றது. எமது பாரம்பரிய சித்த மருத்துவத் துறையை மேம்படுத்தவும்,

மக்களும், குறிப்பாக மாணவர்கள் சித்த மருத்துவத்தின் பலனைஅறியவும், பிரதேசத்தில் உள்ள மூலிகைகளைப் பயன்படுத்தும் முறைகளையும், அதன் மருத்துவப் பயன்களை அறிந்துகொள்ளவும், மூலிகைகளை இனங்கண்டு கொள்ளவும், வீட்டுத்தோட்டமாக எப்படி அபிவிருத்தி செய்லாம் என்று அறிவதற்கும் இக்கண்காட்சி உதவியாக இருந்தது. இக்கண்காட்சியில் எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை நீங்கள் காண்கிறீர்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com